பக்கங்கள்-16 15,கார்த்திகை.2020 விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -321



## தமிழீழ விடுதலைப்புலிகளும், பயங்கரவாதத் தடைச்சட்டமும்




## ‘அமெரிக்கா, சீனா, இந்தியா’ வல்லரசு பிடிக்குள் சிக்கியுள்ள இலங்கை

## கொரோனாவுக்குப் பிந்திய உலக ஒழுங்கு

# தமிழீழ விடுதலைப்புலிகளும், பயங்கரவாதத் தடைச்சட்டமும்



உலக வரலாற்றில் தமக்கான ஒரு இடத்தை தக்கவைத்துக்கொண்ட தமிழ் பேசும் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இலங்கையில் இன்னமும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் மீதான இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது தமிழ்த் தரப்புக்களோ ஈடுபடவில்லை என்பதே இன்றைய நிலைப்பாடு.

சர்வாதிகார நாடுகள் இலங்கை தேசத்திற்குள் கால்பதித்து தமது நிகழ்ச்சி நிரல்களை அமுல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் இந்த நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருந்த கால கட்டத்தில் அந்நிய சக்திகள் இந்த நாட்டுக்குள் தமது காலனித்துவத்தை கொண்டுவர முடியாமல் போனது. குறிப்பாக 30 ஆண்டுகள் வடகிழக்கை தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது மட்டுமல்லாது கடல். வான். தரை என்று 58 கட்டமைப்புக்களை தமது வசம் வைத்திருந்தனர். அதனூடாக நீதி நிர்வாகத் துறையும் சமமாகவே செயற்பட்டது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பூகோள அரசியலை எடுத்துக்கொண்டால் மிகவும் ஒரு குழப்பகரமான நிலைப்பாட்டையே நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகளை 45 நாடுகள் தடை செய்திருந்தன. அதிலும் குறிப்பாக இந்தியா மற்றும் அமெரிக்காவினுடைய தடை என்பது விடுதலைப்புலிகளினுடைய அரசியல் மீள் உருவாக்கத்திற்கு பெரும் பின்னடைவையே ஏற்படுத்தியது. அமெரிக்காவின் பென்டகனில் செப்டம்பர் 11இல் இடம்பெற்ற இரட்டை கோபுரத்தாக்குதல் என்பது உலகத்தில் இருக்கக்கூடிய ஆயுத போராட்ட குழுக்களை ஒரு தீவிரவாதமாகவே கணிப்பிட்டு குறித்த நாடுகளின் உதவியோடு அவற்றை அமெரிக்கா தடை செய்தது. இதில் ஹமாஸ். லக்சரிதொய்பா. பலஸ்தீன விடுதலை இயக்கம். அல்-கைதா. தமிழீழ விடுதலைப்புலிகள் என 38 புரட்சி அமைப்புக்கள் தடை செய்யப்பட்டது. இத்தனை புரட்சி அமைப்புகளிலும் முதன்மை தாங்கிய அமைப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்தனர். இத்தனை அமைப்புகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய கோரிக்கை என்பது தமிழ் மக்களுக்கான வடகிழக்கினைந்த ஒரு தாயகம் என்பதேயாகும். அந்த தாயகத்திற்கான போராட்டமே இந்த நாட்டில் கடந்த 30 ஆண்டு காலமாக இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளோடு ஆயுதம் ஏந்தி போராடிய அல்லது அக்கால கட்டத்தில் உருவாக்கப்பட்ட ரெலோ. புளொட். ஈ.பி.ஆர்.எல்.எப். ஈ.பி.டி.பி போன்ற ஆயுதக்குழுக்களுக்கு இந்த நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் இல்லை. அவர்களுடைய நினைவு தினங்கள் எந்தவித தடையுமின்றி இடம்பெறுகிறது. ஆனால் விடுதலைப்புலிகளில் போராடி இறந்தவர்களுக்கு நினைவு கூறக்கூடாது என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. உதாரணமாக அகிம்சை வழியில் போராடி தன்னுயிரிழந்த தியாகி திலீபன் அவர்களை நினைவு கூறக்கூடாது என்று நீதிமன்றத்தினூடாக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் அந்த நினைவு தினம் கைவிடப்பட்டது. இருந்தும் மறைமுகமாக தியாகி திலீபனுடைய நினைவு தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டம் என்பது தமிழ் மக்கள் மத்தியில் பாரியதொரு பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.இதுவரையில்இந்தமண் மீட்கும் போராட்டத்தில் 50 ஆயிரம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் வீரர்கள் வித்தாகியுள்ளார்கள். 2 இலட்சத்திற்கும்மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் அவர்களுடைய தியாகங்களை எவருமே அனுசரிக்கக்கூடாது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடானது இந்த நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்றதொன்று இருப்பதே பிரதானமான காரணமாகும். தமிழ்த் தரப்பில் இருக்கக்கூடிய சட்டத்தரணிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு சட்டத்தரணிகள் அந்தந்த நாட்டு நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அதற்கான வாத. பிரதிவாதங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதிலொரு கட்டமாக பிரித்தானிய நீதிமன்றம் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கியுள்ளது. அவர்கள் சுதந்திரமாக தமது அரசியல் நடவடிக்கைகளை அங்கு மேற்கொள்வதற்கு அனைத்து வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் ஏனைய இயக்கங்களை போன்று ஏனைய நாடுகளில் உள்ள தீவிரவாத அமைப்புகளில் உள்ளவர்களைப் போன்றவர்கள் அல்ல. ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடியவர்கள். இதுவரையிலும் விடுதலைப் புலிகளுடன் சர்வதேச ரீதியாக 7 பேச்சுவார்த்தைகளும். 14 உள்ளூர் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன. இதில் உலகில் அதிகாரமிக்க அனைத்து நாடுகளும் தொடர்புபட்டிருக்கின்றது என்பதுதான் மிக முக்கியமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

ஆகவே இந்த நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்டுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை. பயங்கரவாதத் தடையை நீக்குவதற்குத் தேவையான கடமைகளைச் செய்ய தமிழ் சட்டத்தரணிகள் சங்கம் முன்வர வேண்டும். இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் அவ்வாறானதொரு வழக்கை தாக்கல் செய்வதனூடாக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இத் தடையை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் ஒரு செயற்பாடு இந்த நாட்டில் உருவாக்கப்படும்.

சர்வதேச நாடுகளினுடைய அழுத்தங்களில் இருந்து இலங்கை தப்பித்துக்கொள்ள வேண்டுமாக இருந்தால் (குறிப்பாக அமெரிக்கா. இந்தியா. சீனா) இந்த நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீள் உருவாக்கம் அவசியமாகிறது. சர்வாதிகார நாடுகளின் பிடியிலிருந்து இலங்கை மீட்சிபெற வேண்டுமாக இருந்தால் விடுதலைப் புலிகளினுடைய தந்திரோபாயங்கள் இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லாது போனால் சீன ஆதிக்கத்தை. இந்திய ஆதிக்கத்தை. அமெரிக்க ஆதிக்கத்தை இந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்க முடியாமல் போகும். கடந்த காலங்களை விட தற்போது இந்நாட்டில் இவ் நாடுகளின் செல்வாக்கு இன்னுமின்னும் அதிகரித்திருக்கிறது. இலங்கை அரசு சர்வதேச நாடுகளின் நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

தமிழினத்தின் மீது இனப்படுகொலை மேற்கொள்வதற்கு மேற்குறிப்பிடப்பட்ட 3 நாடுகளும் ஆயுத ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தார்கள். அதற்கு மாற்றீடாகவே இலங்கை அரசாங்கம் இந்த நாடுகளுடன் கைகோர்த்துச் செயற்படுகிறது. தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் பேச்சுவார்த்தையினூடாக. சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாக இந்த ஆயுதப் போராட்டத்தை மழுங்கடித்தார்கள். அதில் மாற்றுக்கருத்தில்லை.

ஆகவே தமிழினம் இன்னமும் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாத சூழ்நிலை இந்த அரசாங்கத்தினாலும் உருவாக்கப்பட்டுள்ளது. சிங்கள மயமாக்கல். நில ஆக்கிரமிப்பு. கரையோரச் சிங்களவர்களின் குடியேற்றம் போன்ற நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாற்றுத்திருமணம் என்ற போர்வையிலும். இராணுவப் படையணியில் சேர்க்கின்ற போர்வையிலும் தமிழ் மக்களை மீண்டும் ஒரு அடிமைத்தனத்திற்குள் இந்த இலங்கை அரசு கொண்டு செல்ல முயற்சிக்கின்றது. அதற்கான அனைத்து இரகசியத் திட்டங்களும் தமிழினத்தை வைத்தே தமிழினத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன். பா.உ அங்கஜன். கருணா. பா.உ பிள்ளையான் போன்றவர்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களுடைய தன்மானத்தை விற்றுப்பிழைக்கின்ற செயல் வடிவம் உருவாக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தமிழீழ கோரிக்கையை தமிழ் மக்கள் மறந்தவர்கள் என்றும் கூறியிருந்தார். அவர் கூறியதைப்போல தமிழ் மக்கள் மறந்துவிடுவதற்கு முட்டாள்கள் கிடையாது.

ஆகவே இவர்களுடைய நிகழ்ச்சி நிரல்கள் அனைத்தும் தமிழ் மக்களுடைய தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை என்கிற நிலைப்பாட்டில் இருந்து தமிழினத்தை பிரிக்கின்ற ஒரு செயற்பாடாகவே அமையப் பெற்றிருக்கின்றது. ஆகவே தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமைக்காகவே எமது அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று கூறுகின்ற தமிழ் அரசியல் தலைமைகள். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதனூடாகவே தமிழீழ விடுதலைப்புலிகளை ஒருங்கிணைப்புச் செய்து. அரசியல் நீரோட்டத்திற்குள் ஒரு பலம் வாய்ந்த அமைப்பாக மீண்டும் உருவாக்கி. தமிழ் மக்களுக்கானத் தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் தொடர்ந்தும் ஒரு அடிமை இனமாக தமிழினம் வாழக்கூடிய சூழல் இந்த நாட்டில் உருவாக்கப்படும். ஆகவே சட்டத்தரணிகளே! சட்ட ஆலோசனையாளர்களே! பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் மக்களுக்கான நீதி. நியாயம் கிடைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள் என்பதையே நாம் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## வல்லரசுகளின் நெருக்குதல்களால் தடுமாறும் இலங்கை

அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் உலகில் வறிய நாடுகளை தன் பிடிக்குள் கொண்டு வந்து அவற்றின் பொருளாதார வளங்களை ஆக்கிரமித்து வருவதாக குற்றச்சாட்டுக்கள் பலராலும் முன்வைக்கப்பட்டு வருவது இன்று நேற்றல்ல.

இலங்கையில் சீன மற்றும் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இன்று இவ்விரு நாடுகளும் ஏட்டிக்குப்போட்டியாக செயற்பட்டு வருவதை அரசியல் ஆய்வாளர்கள் நன்கு அவதானித்து பல கோணங்களில் ஆய்வுகளைச் செய்தே வருகிறார்கள். இலங்கையை முற்றுகைக்குள் கொண்டுவர இவ்விரு நாடுகளும் களமிறங்கியிருப்பதை இவர்களின் செயற்பாடுகளில் இருந்து அறிய முடிகிறது.

கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் கடற்பாதையில், பாதுகாப்பான, நிரந்தரமான பட்டுப்பாதையை அமைப்பதுதான் சீனாவின் திட்டம் என்று சொல்லப்படுகிறது. இன்று உலக வல்லரசுகளில் ஒன்றாக மாறியிருக்கும் சீனா, தன்னை பலப்படுத்தவும், இந்தியாவை இலங்கை விவகாரங்களிலிருந்து ஓரங்கட்டவும், தனது செயற்பாடுகளை இடையூறில்லாமல் செய்யவும் தேர்ந்தெடுத்த முக்கிய இடமாக இலங்கை திகழ்கின்றது.

இலங்கையை தமது வலைக்குள் சிக்கவைத்துக்கொண்டால் இந்தியாவின் தொல்லையிலிருந்து விடுபடலாம் அத்துடன் தமது கடல் நடவடிக்கைகளுக்கு இலங்கையின் துறைமுகங்களை பயன்படுத்தலாம் என்பது தான் சீனாவின் முக்கியத் திட்டம். இதற்கு ஏற்றாற்போல் தான் இலங்கையில் பாரிய முதலீடுகளைச் சீனா செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது. இதனால் தான் இலங்கைக்கு தமது பொருளாதார உதவிகளை தாராளமாக சீனா வழங்கியது, வழங்கியும் வருகிறது.

இலங்கையின் அனைத்துத் துறைமுகங்கள், பாலங்கள், வீதிகள் புனரமைத்தல் என அனைத்திற்கும் உதவுவதற்கு சீனா தயாராகவே உள்ளது. இலங்கை மீது சீனாவின் தலையீடுகள் தொடர்பில் அமெரிக்காமற்றும்இந்தியாதமதுஅதிருப்தியை வெளியிட்டே வருகிறது. இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்ததன் பின்னர், அமெரிக்கா,சீனா,இந்தியாவின் தலையீடுகள் அதிகரித்திருப்பதைக் காணலாம். கொரோனா பரவலுக்கு காரணமாக இருப்பது சீனா தான் எனக்கூறிய அமெரிக்கா, சீனாவின் மீது கடும் கோபத்தில் இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இலங்கையின் நிலைமை தொடர்பாக அமெரிக்கா தனது கரிசனையை கடந்த சில மாதங்களாக தெரிவித்து வருவதை நாம் அறிவோம். அமெரிக்காவால் உலக அரங்கில் இலங்கையை எதுவும் செய்ய முடியாது. மனித உரிமைச் சபையில் கண்டிக்கலாம் தண்டிக்க முடியாது. ஆகக் கூடியது அமெரிக்கா தனது உதவிகளை நிறுத்தலாம். கடன்களை நிறுத்தலாம். இவற்றை சீனாவால் ஈடு செய்ய முடியும் என்பது அமெரிக்காவிற்கு நன்கு தெரியும். அதனால் தான் எம்சிசி உடன்படிக்கை விடயத்திலும் மென்போக்கைக் கடைப்பிடிப்பதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. இந்த விடயத்தில் அதிக அழுத்தம் பிரயோகிக்க அமெரிக்கா விரும்பவில்லை. அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான உரையாடல்கள் இதனை நன்கு தெளிவுபடுத்துகின்றன.

உலக நாடுகளின் கடன் தொகையால் சிக்கவைக்கப்பட்டிருக்கும் இலங்கை, பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் தான் இருக்கிறது. கடன்களை மீளச்செலுத்தக்கூடிய வகையில் பெற்ற கடன்களின் மூலமான இலாபம் ஈட்டப்படவில்லை என்பது தான் உண்மை. மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் உரிய திட்டமிடல்களுடன் வேலைத்திட்டங்களைச் செய்யவில்லை. மக்கள் இன்னமும் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்குக் கூட சிரமப்படும் சூழல் தான் நாட்டில் இருக்கிறது. நன்கு திட்டமிடப்பட்டு உலக நாடுகளின் வலையில் சிக்கிப்போயுள்ள இலங்கைக்கு விடிவு எக்காலம்?

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**124**

ஏனெனில் இந் நடவடிக்கை கெரில்லா விடுதலை இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வெளியில் மாத்திரமே மேற்கொள்ளப் படுகின்றது. தொழிற் சாலைகள், தொலைத்தொடர்புகள், ஏனைய இலக்குகள் போன்ற அவசியம் நாசவேலை நடவடிக்கைக்கு முதன்மையாக உள்ளாகவேண்டியவற்றின் மீது கெரில்லாக் கட்டளையகம் இதனை நேரடியாக ஒழுங்குபடுத்தி மேற்கொள்கின்றது.



பயங்கரவாதத்துடன் ஒப்பிடுகையில் நாசவேலை ஒத்த பண்புகளெதனையும் கொண்டதல்ல. இதனைப் போன்றே நாங்கள் பூரணமாக வெவ்வேறானவையாக மக்கள் மீதான பயங்கரவாதத்தையும் தனி நபர் மீதான பயங்கரவாதத்தையும் கருதுகின்றோம். மக்கள்மீதான பயங்கரவாத முறைகளை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. ஏனெனில் இவை வேண்டப்படுகின்ற பெறுபேறுகளைத் தருவதில்லை. இம்முறைகள் புரட்சியமைப்பிலிருந்து மக்களை வெளித்தள்ளுவதுடன் நியாயமற்ற வகையில் வீரர்களின் சாவுக்கும் காரணமாகிவிடுகின்றது. தவிர்க்க முடியாத சமயங்களில் தனிநபர் மீதான பயங்கரவாதம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

சர்வாதிகார ஆட்சி புரிகின்ற தலைவர்களில் ஒருவனை அழிப்பதற்காக இம்முறையைப் பயன்படுத்துகின்றார்கள். அனுபவமுள்ள, துணிந்த, திடமான ஆட்களிடம் அற்பனொருவனை அழிப்பதற்கான பணியைக் கொடுத்து அவர்களின் உயிரோடு விளையாடக்கூடாது இது புரட்சியாளர்களின் அழிவிற்கும் அடக்குமுறையின் அதிகரிப்பிற்கும் மாத்திரமே இட்டுச்செல்லும். நாசவேலையை இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர். ஒன்று குறித்த இலக்குகளின் மீது தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நாச வேலை. மற்றையது சமர் நடவடிக்கை வலயத்தில் மேற்கொள்ளப்படும் நாசவேலை. தேசிய அளவில் மேற்கொள்ளப்படும் நாச வேலை பிரதானமாகத் தனது இலக்காக தொடர்பூடகங்களை அழிப்பதையே கொண்டுள்ளது. இது வெவ்வேறு வழிவகைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. சகல தொடர்பூடகங்களும் தாக்குதலுக்குள்ளாகக் கூடியனவாக இருக்கின்றதென்பது அறியப்பட்ட விடயமாகும். எடுத்துக்காட்டாக தொலை பேசி மற்றும் தந்தித்தொடர்புக் கம்பங்களை அவை பாதுகாக்கப்படாதநேரமான இரவில் இலகுவாக அகழ்ந்து சிறிதாகத் தள்ளியே விழுத்திவிடலாம். இப்படி விழுத்தப்படும்ஒருகம்பம்தன்னுடன் சேர்த்து ஏனைய கம்பங்களையும் இழுத்து விழுத்துகின்றது. இதன் விளைவாகப் பெரியளவு பரப்பில் தொலைபேசித் தந்தித்தொடர்பு சீர்கெடுகின்றது. வெடிபொருட்களின் உதவியுடன் பாலங்களையும் தகர்க்கலாம். அப்படி வெடிபொருட்கள் இல்லாதவிடத்து எடுத்துக்காட்டாக இரும்புப் பாலங்களை வாயுத்தொழிற்பாட்டு இரும்பு உருக்கியினுதவியால் அழிக்கலாம். இவ்வுபகரணத்தின் உதவியால்

பாலத்தின்பிரதான தாங்குதூண்கள் அறுக்கப்படுகின்றதுடன், முழுக் கட்டுமானத்தையும் தாங்குகின்ற பாலத்தின் மேலுள்ள பரிதி வடிவ இரும்பும் அறுக்கப்படுகின்றது. இந்நடவடிக்கைகள் யாவும் பாலத்தின் மறுமுனையிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்பின் பாலத்தை மிகவும் நாசடைகின்றது. இவ்வாறே டைனமற் இல்லாமல் இரும்புப் பாலத்தை மிகவும் வினைத்திறனுடன் தகர்க்கும்முறை விளங்குகின்றது. புகைவண்டிப் பாதைகள், வெவ்வேறு வகையைச் சேர்ந்த வீதிகள்,கழிவு நீர்க்குழாய்கள் போன்றனவும் அழிக்கப்பட வேண்டும். சில வேலைகளில், கெரில்லாப் படைப்பிரவின் சாத்தியத்தைப் பொறுத்து புகைவண்டித் தொடர்களும் தகரக்கப்படுகின்றன.

குறித்த சமயங்களில் ஒவ்வொரு பிரதேசத்தினதும் மிக முக்கியமான தொழிற்சாலைளும் அழிக்கப்படுகின்றன. இவற்றிற்காக அவசியமான கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இச்சமயங்களில் சகல பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காக மேற்க்கொளப்படுகின்ற பணியின் முக்கியதுவத்தில் அக்கறை செலத்தப்படவேண்டும். ஏனெனில், எந்தவித அவசியமுமில்லாமல், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்ற மூலத்தை அழிக்கக்கூடாது. இதனால் ஏற்படும் விளைவாகப் பாரியளவில் வேலையற்றோர், பட்டினி போன்றன ஏற்படுகின்றன. ஆளும் வர்க்கத் தரப்பிற்குச் சொந்தமாக இருகின்ற தொழிற்சாலைகள் அழிக்கப்படுவது அவசியமாகும். இதன்போது, தொழிலாளர்களுக்கு இந் நடவடிக்கை மேற்க்கொள்ளப்படுவதன் அவசியத்தை விளக்கவேண்டும். தொழிற்சாலைகளை அழிக்கின்ற போது, பாரதூரமான சமூக விளைவுகளைக் கொண்டு வருகின்ற சந்தர்ப்பம் இருந்தால், அதனை தவிர்க்க வேண்டும். மீண்டும் ஒரு தடவை குறிப்பிடுகின்றோம், நாச வேலை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பிரதான கவனம் யாவும் தொடர்பூடகங்களிலும் போககுவரத்து பாதைகளிலுமே செலுத்தப்படுகின்றன. ஏனெனில், இவையே நகர்விற்கு வசதியான பிரதேசங்களில் மேற்க்கொள்ளப்படும்

கெரில்லாக்களுடனான சமரில் எதிரி இராணுவத்தின் செயற்ப்பாட்டு ஆயுதமாக விளங்குகின்றன. ஆகவே தான், தொடர்ச்சியாகப் புகைவண்டிப் பாதையிலுள்ள பாலங்களை தகர்த்தல், கழிவுநீர் கட்டுமானங்களைச் சிதைத்தல், மின்வழங்கல் கம்பியைச் சேதப்படுத்தல், தொலை பேசிக் கடத்திகளை அறுத்தல், நீர்வழங்கல் கட்டுமானங்களை அழித்தல் போன்றவற்றை மேற்கொளவேண்டும். சுருங்கச் சொன்னால், மக்கள் வாழ்விடங்களின் சாதாரண இயங்கல் நிலையைப் பாதிப்புக்குள்ளாக்க வேண்டும். இவ்வாறாகவே சமர் நடவடிக்கை வலயத்தில் மேற்கொள்ளப்படும் நாச வேலையும் மேற்கொளப்படுகின்றது.

ஆனால், கூடிய தைரியத்துடனும் முழுமுயற்சியுடனும் சமர் நடவடிக்கையோடு ஒத்திசைந்ததாகவும் மேற்கொளப்படுகின்றது. இச்சமயங்களில் பாரிய ஆதரகைக் கெரில்லா இராணுவத்தின் "பறக்கும் ரோந்துகள்" வழங்குகின்றன. ஆய்வணிகள் குறித்த பிரதேசத்திற்குள் ஊடுருவி, பணியை நிறைவேற்றுவதற்கு உள்ளூர் அமைப்பிற்கு உதவி புரிகின்றன. சமர் நடவடிக்கை வலயத்திலும் நாச வேலை தொடர்பூடகங்களை அழிப்பதாகவே விளங்குகின்றது. ஆனால், மிகத்தீவிரமாக மேற்கொளப்படுகின்றது.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# அமெரிக்கா, சீனா, இந்தியா வல்லரசுகளின் பிடிக்குள் சிக்கியுள்ள இலங்கை



இலங்கையில்1978ஆம்ஆண்டுதொடக்கம் நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டு ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் ஆட்சி புரிந்தார். இக்காலகட்டத்தில் இலங்கையில் சிறுபான்மை இனமான தமிழினம் சிங்கள இனவாத அரசியலுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் களமிறங்கிய காலம் இந்த ஆயுதப் போராட்டங்களுக்கு எமக்கு அருகிலுள்ள வல்லரசாக பார்க்கப்படும் இந்தியா ஆயுத உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்கி ஊக்கப்படுத்தியது. இக்காலகட்டங்களில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக கருதப்படும் இஸ்ரேல் நாட்டுடன் அதிகமாக இருந்தது. அத்துடன் இத்தாலி போன்ற நாடுக ளுடன் வெளியுறவுக் கொள்கையில் நட்புறவுடன் காணப்பட்டது. இத்தாலி தயாரிப்பான சியாமசெட்டி குண்டு வீச்சு விமானங்களை 1985ஆம் ஆண்டு கொள்முதல் செய்ததுடன் இஸ்ரேல் விமா னிகளையும் இத்தாலி விமானிகளையும் கொண்டு இலங்கைக்குள் இடம்பெற்ற உள்நாட்டு போரில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பயன்படுத்தியது. இலங்கையின் அமெரிக்காசார் நிலைப்பாடு இந்தியாவுக்கு பிடிக்கவில்லை. இதற்கு இந்தியா ஒரு இராஜதந்திர ரீதியான முயற்சியில் இலங்கையை சிக்கவைத்தது மட்டுமன்றி அந்த வலைக்குள் தானும் சிக்கி சின்னாபின்னமானது வரலாறு. அதன் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற ஆட்சி மாற்றங்களின் பின் சுதந்திரக்கட்சி ஆட்சியை அமைத்தது. இக்கட்சியானது தனது வெளியுறவுக் கொள்கையில் மாற்றத்தைஏற்படுத்திசீனாபக்கம்தலையை சாய்க்க தொடங்கியது. இதற்கு முதல் காரணம் சீனாவில் பெரும்பாலான மக்கள் பௌத்த மதத்தை சேர்ந்தவர்கள்.

பௌத்த தேசியவாதம் இரு நாடுகளை யும் இணைத்தது இவ்விடத்தில் ஓர் விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியானது 1978க்கு முன்னர் தன்னிறைவுப் பொருளா தாரக் கொள்கையை முன்னெடுத்தது. இதன் காரணமாக வெளிநாடுகளில் இருந்து எவ்வித பொருட்களும் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டது. பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி 1978 தேர்தல் விஞ்ஞாபனத்தில் திறந்த பொருளா தாரக் கொள்கையை தேர்தலில் வெற்றி பெற்றால் அமுல்படுத்துவதாக அறிவித்தது. தேர்தலிலும் வெற்றிபெற்று 1978 முதல் திறந்த பொருளாதாரக் கொள்கையின்படி வெளிநாட்டு பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இதன் மூலம் சீனா ஜப்பானின் பொருட்கள் இலங்கையில் அதி கமாக இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்தன தொடக்கம் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதிகள் தமது வெளியுறவுக் கொள்கையில் சீனா வின் பக்கம் திருப்பாமல் இருந்ததுடன் அமெரிக்கா சார் நிலையினை கொண்டே வந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதியான சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் அவர்களின் பின்னர் வந்த மகிந்த ராஜபக்ச அவர்களும் தமது வெளியுறவுக் கொள்கையில் சீனாவின் பக்கம் முழுமையாக திருப்பினர் என்றே சொல்ல வேண்டும். இதற்கு மிக முக்கியமான ஓர் காரணம் இலங்கையில் தமிழின விடிவுக்காக போராடிக் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒழிப்பதற்கு சீனா மிகப்பெரும் உதவியை புரிந்துள்ளது. இந்தியா பாகிஸ்தான் அமெரிக்கா நாடுகளை விட சீனா பாரிய உதவிகளை புரிந்ததுடன் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி வேலைத்திட்டங்களிலும் சீனாவின் பங்கானது மிக அதிகமானது. இவ்வாறு சீனாவின் இலங்கை மீதான செல்வாக்கு மிக வேகமாக அதிகரித்து இதனை முற்றிலும் இந்தியா விரும்பவில்லை. இலங்கை சீனா உறவால் பெரும் தலை யிடியில் இந்தியா காணப்படுகின்றது. சீனாவின் இந்தியா எல்லை மீறி நடத்தும் தாக்குதல்கள் மற்றும் சீனாவின் இராணுவ வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி என சீனாவின் ஒவ்வொரு வளர்ச்சியும் இந்தியாவை சினம் கொள்ள வைப்பதாக உள்ளது.

அத்துடன் இலங்கை பாகிஸ்தான் உறவுக ளாலும் இந்தியா மிக கோபம் அடைந்து காணப்படுகின்றது. இலங்கை சீனாவின் உறவால் சீற்றமடைந்துள்ள இன்னுமொரு நாடு அமெரிக்கா. கடந்த 2019ஆம் ஆண்டு கொரோனா வைரசினை உலகம் முழுவதும் பரப்பி பல இலட்சக்கணக்கான மக்களை பலியெடுக்கவும் அமெரிக்காவில் மட்டும் 3 இலட்சம் மக்கள் பலியாக சீனா தான் காரணமென அமெரிக்கா பலத்த குற்றச்சாட்டை முன்வைத்து வரும் நிலையில் அங்கு ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது. அதில் ஜன நாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் வெற்றியீட்டியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தோல்வி அடைந்துள்ளார். டொனால்ட் ட்ரம்ப் தனது வெளிநாட்டு கொள்கையில் சில அதிரடி நடவடிக்கைகளை மெற்கொண்டு அமெரிக்கா மக்களை மட்டுமன்றி உலகை யும் திரும்பி பார்க்கவைத்தர் அதில் சில அமெரிக்காவின் தற்போதைய பகையாளி நாடான வடகொரியா ஜனாதிபதியை அதிரடியாக சந்தித்து பேசினார். அத்துடன் இந்தியப் பிரதமர் மோடி அவர்களை அமெரிக்கா அழைத்து அங்கு வாழும் இந்தியா வம்சாவழியினரை சந்தித்து அளவாவியதுடன் கலை நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றினர். அடுத்து அவர் எடுத்த மிக மோசமான ஒரு போர் உருவாகும் நிலைக்கு சென்ற ஈரானின் பாதுகாப்பு தளபதியை ஈராக் விமான நிலையத்தில் வைத்து ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடாத்தி கொன்றவுடன் ஈரானில் பதட்டம் உருவாகி போர் ஒன்று ஏற்படுவது போல் தோன்றி பின்னர் அவ்விடயம் தணிந்து சென்றது. அவர் ஆட்சியில் இடம்பெற்ற அமெரிக்கர்களுக்கு கிடைத்த ஒரு நல்ல விடயம் யாதெனில் அமெரிக்கா பிறப்பிடமாக கொண்ட அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு முன்னுரிமை வழங்கியது. இதனால் வேலையில்லாப் பிரச்சனை 6மூ வீதத்தில் இருந்து 3 வீதமாக குறைவடைந்தமை பாராட்டத்தக்க விடயமாக அமெரிக்கர்களால் நோக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க அமெரிக்க ஜனாதிபதியின் செயற்பாட்டை மட்டுபடுத்த அமெரிக்கசெனட்சபை என்றும் ஓர்அமைப்பு உள்ளது. ஆனால் ஜனாதிபதி ட்ரம்ப் அவர்கள் அமெரிக்கா செனட் சபையின் அதிகாரங்களுக்கு கட்டுப்பட்டு நடக்ககூடியவர் அல்ல என அவரது பல செயற்பாடுகள்காட்டி நிற்கின்றன. இவ்வாறு டொனால்ட் ட்ரம்பின் ஆட்சிக் காலம் முடிவடைந்து இப்பொழுது ஜோ பைடன் ஆட்சி பீடம் ஏறவுள்ளார். ஜனாதிபதியாக உள்ள உலக முதல் வல்லரசின் 46 வது ஜனாதிபதியாக உள்ள இவர் எவ்வாறு பூகோள ரீதியாகவும் ஏனைய நாடுகள் மீது இவரின் செயற்பாடு எவ்வாறு அமையப்போகின்றது என உல கமே எதிர்பார்த்திருக்கின்றது. ஜோ பைடன் மிகவும் அமைதியான சுபாவம் உடைய வர் அத்துடன் மேல்மட்ட மக்களைவிட இவர் கீழ்மட்ட மக்களுடன் நெருங்கி பழகக்கூடியவர். பராக் ஒபாமா அவர்கள் தேர்தலில் போட்டியிட்ட பொழுது அதே ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஜோ பைடனும் போட்டியிட இருந்தார். ஆனால் ஒபாமாவுக் தனது நிலைப்பாட்டை மாற்றி ஒபாமா ஜனாதிபதியாக விட்டுக்கொடுத்து தான் உப ஜனாதிபதியாளர் இவ்வாறு சீரிய ளாங்கள் கொண்டதால் தான் இம்முறை தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா அவர்கள் இவருக்கு ஆதரவு வழங்கி பிரச்சாரம் பண்ணினார். அத்துடன் ஜோ பைடன் சகல நாடுகளையும் அரவணைத்து செல்லும் பாங்குள்ளவர் என தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் கடந்த சில ஆண்டு காலமாக சீனாவின் விஸ்வரூப வளர்ச்சி அதிகரிக்கும் இராணுவ மயமாக்கல் இந்தியா எல்லை தாண்டிய போர் நடவடிக்கை இதற்கு எல்லாம் மேலாக இலங்கையுடனான மிகப்பெரிய நெருக்கம் என சீனாவின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அமெரிக்கா இந்தியாவை சீண்டு நிலையி லேயே உள்ளது.

இந்தியா இலங்கைக்கு மிக அருகிலுள்ள நாடு மட்டுமல்லாது இலங்கையின் பிராந்திய நலனிலும் இந்தியாவின் செல்வாக்கு அதிகமாகவே காணப்பட்டு வந்துள்ளது. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலங்களில் 1987ஆம் ஆண்டு இந்தியா இலங்கை வான் பரப்பை அத்துமீறி வந்து உணவு பொட்டலங்களை தமிழர் பகுதிகளில் வீசிச்சென்றது. இதற்கு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி அனுமதியளித்திருந்தார். ஒரு நாட்டின் மீது அத்துமீறி உள்நுழைவதானது மிகவும் ஆபத்தான விடயம் அதற்கு பல நாடுகள் எதிர்க்கும் அத்துமீறி நுழையும் போது இலங்கைக்கு ஆதரவாக சில நாடுகள் களமிறங்கலாம். இதனால் ஓர் பெரும் போர் வரக்கூட அந்நாளில் சாத்தியம் இருந்தது ஆனால் ரஜிவ் காந்தி அப்பொழுது உணவு பொட்டலங்கள் இலங்கைக்குள் சென்று போடுவதற்கு முன்னர் அமெரிக்காவிடம் இது சம்மந்தமாக உரையாடி இருந்தார். அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் றோனல்ட் றீகன் அவர் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார். உடனே ரஜிவ் காந்தி அப்பொழுது பிரிவுபடாத ராஞ்யா சோவியத் யூனியனா இருந்தது. அப்போதைய சோவியத்யூனியன் ஜனாதிபதி கோர்பச்சேவ் இடம் கேட்ட பொழுது உடனடியாக கோர்பச்சேவ் நீங்கள் உங்கள் நடவடிக்கையை செய்யுங்கள். இது சம்மந்தமாக அமெரிக்கா ஏதாவது செய்ய முனைந்தால் நான் பார்த்துக்கொள்கின்றேன் என அவர் கூறியதும் ராஜிவ் மிகத் தென்புடன் ஒப்பரேசன் பூமாலை என பெயரிட்டு அந்த நடவடிக்கையை மேற்கொண்டார். இதை ஏன் இங்கு குறிப்பிடுகின்றோம் என்றால் அந் நாளிலிருந்து இந்தியா தற்பொழுது ரசியாவாக உள்ள இந்த இரண்டு நாடுகளுக்கிடையேயான நட்புறவானது பொருளாதாரத்தை தாண்டி இராணுவ மயமாக்கலில் விண்வெளி செயல்பாடு என விரிந்து காணப்படுகின்றது. இந்தியா அண்மையில் தயாரித்த உலகை மிக அச்சுறுத்தும் பாரத்மால் ஏவுகணையை ரசியா இந்தியா கூட்டு முயற்சியில் மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவில் உள்ள மிகப்பலம் வாய்ந்த உலங்கு வானூர்திகள் ரசிய நாட்டை சேர்ந்தவை. விண்வெளிக்கு ஏவப்படும் றொக்கட்டுகள் பல ரசிய கூட்டு முயற்சியால் செயற்படத்தப்படுகின்றது. இப்படி இந்தியா ரசிய உறவு உள்ள நிலையில் மறுபக்கம் சீனாவும் ரசியாவும் மிக நெருங்கிய நட்புறவாக காணப்படுகின்றது. ரசியாவில் உள்ள பல முக்கிய நிறுவனங்களில் சீனர்கள் மிகப்பெரும் பதவிகளில் உள்ளனர். கூட்டு இராணுவ ஒத்திகை என்பன இரு நாடுகளும் ஈடுபடுகின்றன. அத்துடன் கடல் வெளி பாதுகாப்பு நடவடிக்கைளிலும் இரு நாடுகளும் ஈடுபடுகின்றனர். இவ்வாறு இருநாடுகளும் ரசியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு செயல்பட்டு வரும் நிலையில் சீனா இந்தியா ஆகிய இரு நாடுகளும் இலங்கையில் தமது செல்வாக்கை நிலைநிறுத்த போராடி வருகின்றனர். இதில் தற்பொழுது சீனா வின் கை ஓங்கியுள்ளது என்பதே உண்மை யான விடயம் சீனா இலங்கையில் பல முதலீடுகளை இட்டுள்ளதுடன் பல வேலைவாய்ப்பு நிறுவனங்களையும் இயக்கி வருகின்றது. இந்தியாவும் தன்பங்குக்கு மிகஅண்மையில் இலங்கைக்காக இந்தியத்தூதுவர் இலங்கையில் பல பொருளாதார ரீதி யான ஒப்பந்தம் ஒன்று மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுடன் இடம்பெற்ற ஒப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு சுமார் 300 கோடி அளவில் திட்டம் இடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு உள்ள நிலை யில் புதிய அமெரிக்கா ஜனாதிபதியின் செயற்பாடு எவ்வாறு அமையப்போகின்றது. அமெரிக்க தேர்தல் இடம்பெற்றுக்கொண்டு இருக்கும் பொழுதே டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் தனது வெளியுறவு இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவை இலங்கைக்கு அனுப்பி வைத்ததுடன் அவர் இந்தியாவும் சென்று திரும்பினார். இது ஒரு நட்பு ரீதியான பயணமாக கூறப்பட்டாலும் மறைமுகமாக சீனாவை எச்சரிப்பது போல் தென்படுகின்றது. அமெரிக்கா புதிய ஜனாதிபதி ஜோ பைடன் எதிர்வரும் 2021 ஜனவரி 25 ஆம் திகதி ஜனாதிபதி பதவியை பொறுப்பெடுக்க உள்ளார். இந்தியா சீனா உறவில் இருந்து இலங்கை தனது பக்கம் திரும்ப ஜோ பைடன் அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை கையிலெடுக்கலாம். எவ்வாறெனில்அண்மையில்பிரித்தானிய விடுதலைப்புலிகளின் தடையை மேல் நீதிமன்றம ' நீக்கியுள்ளது. ஆனால் உத்தியோக பூர்வமாக பிரித்தானிய அரசு இதனை எவ்வாறு எடுக்கும் என்பதை பொறுத்தே உள்ளது. இதனை அமெரிக்கா தனக்கு சாதகமா கவும் இலங்கைக்கு ஓர் அழுத்தத்தை கொடுக்கவும் பிரித்தானியாவை பயன்படுத்த கூடும் அத்துடன் சவேந்திர சில்வாவின் அமெரிக்க பயணத்தடையை நீக்க முயற்சிக்கும் அடுத்த வருடம் வர இருக்கும் ஐ.நா சபையில் இலங்கை விவாகரத்தை கையிலெடுத்து ஓர் மறைமுக எச்சரிக்கை பண்ண கூடும் இலங்கையின் கடற்படை பாதுகாப்பு பயிற்சியினை வழங்க முன் வரக்கூடும். இவ்வாறு பல செயற்பாடுகளை இலங்கை எதிர்பார்க்கலாம் ஜோ பைடன் 2 முறை நேரடியாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்து தனது 77 வது வயதில் மூன்றாவது தடவையாக போட்டியிட்டு வெற்றியடைந்துள்ளார்.

ஆகவே அமெரிக்கா உட்பட ஏனைய ஆசிய பசுபிக் நாடுகளில் மிகப்பெரும் மாற்றம் அடைய வாய்ப்புள்ளது. இவருக்கு ஆதரவாக அருகில் உள்ளவர் பராக் ஒபாமா இவரும் மிகச் சிறந்த ஒரு ஜனாதிபதியாக பார்க்கப்படுகின்றார். செப்டம்பர் 11 அமெரிக்க இரட்டைகோபுர தாக்குதலானது அமெரிக்காவும் ஒரு கரும் புள்ளியாக அமைந்தது. அதற்கு பிரதான சுத்திரதாரியான ஒசாமா பின்லேடனை பாதுகாப்பாக பாகிஸ்தானில் இருந்த பொழுது பாகிஸ்தானுக்கே தெரியா மல் அதிரடியாக சென்று சுட்டு கொன்று அவரது உடலை கடலுக்குள் வீசிச் சென்ற தாக்குதலை அனுமதி வழங்கி தாக்குதலை நேரடியாக பார்வையிட்டு அமெரிக்காவின் கரும்புள்ளி துடைத்தழித்தவர் இந்த பராக் ஒபாமா. ஆகவே அவரும் அருகில் இருப்பதால் உலக நாடுகள் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து காத்து நிற்கின்றது. தற்பொழுது இலங்கையில் உள்ள ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் தனது வாழ்க்கையில் பெரும் பகுதியை அமெரிக்காவில் கழித்தவர். இருந்த பொழுதிலும் சீனாவை விட்டு அமெரிக்கா பக்கம் தனது வெளியுறவு நிலையை திருப்ப முடியாத நிலையிலும் இந்தியாவை பகைத்து எதுவும் செய்ய முடியாத நிலை யிலும் மும்முனை வல்லரசுகளின் பிடிக்குள் இலங்கை சிக்கி தவிக்கின்றது. இச்சிக்கலில் இருந்து எவ்வாறு இலங்கை மீளப்போகின்றது என்பதே காலம் சொல்லப்பொகும் பதிலாகும்.

**தாயகத்தான்**

# கொரோனாவுக்குப் பிந்திய உலக ஒழுங்கு! மாறிக் கொண்டிருக்கும் பூகோளப் போக்குகள் குறித்த சில பார்வைகள்



[சிராஜ் மஷ்ஹூர்]

பகுதி- 01

**அறிமுகம்**

கொரோனா வைரஸ் (Covid 19) ஒட்டுமொத்த உலகையும் உலுக்கி ஆட்டம் காண வைத்திருக்கிறது. ஏக காலத்தில் முழு உலகுமே ஸ்தம்பித்திருக்கும் புதுவித அனுபவத்தை எதிர்கொண்டிருக்கிறோம். இதுவரை 200இற்கும் அதிகமான நாடுகள் மற்றும் அதிகாரப் பிரதேசங்கள் வரை இதன் தாக்கம் பரவியிருக்கிறது. மார்ச் 11 ஆம் திகதி உலக சுகாதார நிறுவனம் (WHO), இதை உலகளாவிய பரவல் என (Pandamic) பிரகடனம் செய்தது. இன்றைய திகதி வரை, நோய்த் தாக்கம் அண்ணளவாக 2 மில்லியன்பேர்வரைப்பரவியுள்ளது. சுமாராக ஒன்றரை இலட்சம் பேரளவில் இறந்துள்ளனர்.

உலகளாவிய தரை வழி, வான் வழி, கடல் வழிப் போக்குவரத்து நடவடிக்கைகள் ஸ்தம்பித்திருக்கின்றன. நாடுகளுக்கிடையிலான பௌதீக தொடர்புகள் கடுமையாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளன. உலகெங்கும் பல பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன. பொருளாதார முடக்கமும் மந்த நிலையும் தீவிரமடைந்திருக்கிறது. அடுத்தவேளை சாப்பாடு பலருக்குப் பிரச்சினையாக மாறிக் கொண்டிருக்கிறது. பொருளாதார நடவடிக்கைகளை சுமுக நிலைக்குக் கொண்டு வர முடியாமல் அரசாங்கங்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. உலகளாவிய மருத்துவ வசதிகளின் போதாமை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார உதவிகளை வழங்குவதிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இதுவரை இதற்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இது எப்போது முடியும், எங்கு போய் முடியும் என்பதை அனுமானிக்க முடியாத நிலையே தொடர்கிறது.

இந்த வைரஸ், உலகளாவிய யுத்தத்தைத் தூண்டும் உயிரியல் ஆயுதமா, சதி நடவடிக்கையா அல்லது இயற்கையின் (இறைவனின்) பேரனர்த்தமா என்ற விவாதத்தை இப்போதைக்கு சற்று தள்ளி வைப்போம். இது தற்காலிகமான ஒரு நிலையே என சிலர் கருதுகின்றனர். ஆனால், இதன் தாக்கங்கள் அதிக காலம் நீடித்திருக்கும் என்பதே தர்க்க ரீதியான உண்மையாகும்.

இந்தப் பின்புலத்தில்தான், கொரோனா வைரஸிற்குப் (Covid 19) பிந்திய உலகம், வித்தியாசமான புதிய ஒழுங்குக்குள் ஏற்கனவே நகரத் தொடங்கிவிட்டது என்பதை நுண் உணர்வுள்ளோர் புரிந்து கொள்வர். ஆதலால், கொரோனாவுக்குப் பிந்திய காலம் அதன் உலகளாவிய போக்குகள் குறித்து இந்தக் கட்டுரை கவனம் செலுத்த விழைகிறது.

பகுதி – 02

**சில பின்னணித் தகவல்கள்**

மனித குல வரலாற்றில் 20 ஆம் நூற்றாண்டு, பல ஆச்சரியங்களையும் பாரிய திருப்புமுனைகளையும் பேரழிவுகளையும் எதிர்கொண்ட காலகட்டமாகும். (விரிவஞ்சி இதற்கு முந்தைய 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க விடயங்களைத் தவிர்க்கிறேன்).

**முதலாம் உலகப் போர்**

மனித வரலாற்றில் இடம்பெற்ற பாரிய பேரழிவு யுத்தமாக இது கணிக்கப்படுகிறது. ஜேர்மனி, ஒஸ்ற்றியா, ஹங்கேரி, ஒட்டோமன் (உஸ்மானிய) சாம்ராஜ்யம் ஆகியன 'மத்திம நாடுகள்' (The Central Powers) என ஓரணியிலும் பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகியன 'நேச நாடுகள்' (The Allied Powers) என மற்றொரு அணியிலும் பிரிந்து நின்று போரிட்டன. போர் முடிவில் நேச நாடுகள் தாம் வெற்றி பெற்றதாக அறிவித்தன. முதலாம் உலகப் போர், 1914 – 1918 வரை நீடித்தது. இதில் 9 மில்லியன் இராணுவத்தினரும் 7 மில்லியன் பொது மக்களும் (மொத்தமாக 16 மில்லியன் பேர்) இறந்ததாக மதிப்பிடப்படுகிறது. இதனோடு தொடர்புபட்ட பல இனப்படுகொலைகளும் (Genocides) உள்ளன. பெரிதும், மேற்கு ஐரோப்பாவினதும் மத்திய ஐரோப்பாவினதும் அரசியல் மேலாண்மைக்காக (Political Hegemony) நடைபெற்ற யுத்தமாக முதலாம் உலகப் போரைக் கணிப்பிட முடியும்.



**இன்புளுவென்சா சளிக் காய்ச்சல் / ஸ்பானிஷ் சளிக் காய்ச்சல்**

இதேபோல, 1918இல் ஏற்பட்ட இன்புளுவென்சா சளிக் காய்ச்சல் (1918 Flu Pandemic) உலகையே அதிர வைத்தது. 1918–1920 வரை நீடித்தஇந்நோய்த்தொற்றால்சுமார் 500 மில்லியன் பேர் (அப்போதைய உலக சனத்தொகையில் கால் பங்கினர்) பாதிப்புக்குள்ளாகினர் என்று சொல்லப்படுகிறது. இலங்கையையும் இது பாதித்தது. இது தொடர்பான சில வாய்மொழிப் பாடல்களும்உள்ளன. பழையதலை முறையினர் இது பற்றிப் பேசுவதை நாமும் செவியுற்றிருக்கிறோம். மனித வரலாற்றில் பேரழிவை ஏற்படுத்திய பாரிய தொற்று நோயாக இதுவே உள்ளது. 17 மில்லியன் முதல் 50 மில்லியன் பேர் வரை இதில் இறந்தனர் என்று கணிப்பிடப்படுகிறது. சிலர் 100 மில்லியன் பேர் இறந்துள்ளதாக சொல்கின்றனர்.

முதலாம் உலகப் போரில் ஈடுபட்ட முக்கியமான சில நாடுகள், தமது போர் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு விடும் என்பதற்காக, இது பற்றிய தகவல்களைத் தணிக்கை செய்தன. இதுவும், அப்போதிருந்த தொடர்பாடல் மட்டுப்பாடுகளும் இது பற்றிய துல்லியமான தகவல்களைப் பெற முடியாத சூழலை ஏற்படுத்தியது. இக்காலத்தில் போரில் ஈடுபடாமல் இருந்த ஸ்பெயினிலிருந்து, இது பற்றிய தகவல்கள் வெளிவரத் தொடங்கின. அந்நாட்டு மன்னரும் இக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் ஸ்பெயின் கடுமையாகப் பாதிக்கப்பட்டது போன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டது. இந்நிலையே ஸ்பானிஷ் சளிக் காய்ச்சல் (Spanish Flu) என இது பரவலாக அறியப்படக் காரணமாகியது. (உதாரணத்திற்கு, கொரோனாவை 'Covid 19 ஐ' சிலர் சீன வைரஸ் என்று அழைப்பது போல).

**இரண்டாம் உலகப் போர்**

1914 தொடக்கம் 1939 வரையான காலம் குறிப்பாக ஐரோப்பாவில் வன்முறைகள் மலிந்த காலமாகவே காணப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டின் இரு பெரும் போர்களுக்கு இடைப்பட்ட மூன்று தசாப்த காலம், வன்முறைகளினூடாகவே நகர்ந்தது. முதலாம் உலகப் போரின் விளைவுகளை மாற்றியமைக்க முனைந்த ஒரு அதிகாரத் தரப்பினர் மற்றும் புதிதாக உருவாகியுள்ள 'நிலையான' அரசியல் ஒழுங்கு மூலம் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ள முனைந்த மற்றைய அதிகாரத் தரப்பினர் ஆகியோருக்கிடையிலான ஆதிக்க மோதலே இரண்டாம் உலகப் போராக வெடித்தது.

இப்போர் 1939 – 1945 வரை நீடித்தது. நேச நாடுகளுக்கும் (Allies) அச்சு நாடுகளுக்கும் (Axis) இடையில் இடம்பெற்ற இப்போரில், 40 மில்லியனுக்கும் 50 மில்லியனுக்கும் இடைப்பட்டோர் இறந்ததாக மதிப்பிடப்படுகிறது. இதுவே மனித வரலாற்றில் இடம்பெற்ற மிகப் பாரிய பேரழிவு யுத்தமாகும். போரில் பங்கேற்ற பிரதான நாடுகள், தம்மிடமிருந்த பொருளாதார, கைத்தொழில் மற்றும் விஞ்ஞான ஆற்றல்களையெல்லாம் பிரயோகித்தனர். இன அழிப்பு, திட்டமிட்ட குண்டுத் தாக்குதல், பட்டினி, நோய், அணுகுண்டு என்று கடும் கறைபடிந்த வரலாறு இரண்டாம் உலகப் போருக்கு இருக்கிறது. இந்தப் பின்புலமே ஐ.நா சபையின் (UN) தோற்றத்திற்கும் வழி வகுத்தது. அது போரில் வென்ற நாடுகளின் இரத்து செய்யும் அதிகாரம் (Veto power) மூலம், தன்னை மேலும் நிலைநிறுத்திக் கொண்டது. நாடுகளுக்கிடையிலான விவகாரங்களைக் கையாளும் சர்வதேச நிறுவனமாக படிப்படியாக தன்னை வளர்த்துக் கொண்டது.

**காலனியமும் பின்காலனியமும் (Colonialism and Post-colonialism)**

ஐரோப்பிய நாடுகள் உலகத்தின் பெரும் பகுதியை தமது காலனிய ஆதிக்கத்தின் பிடியில் வைத்திருந்தன. உலகப் போர்களுக்குப் பிந்திய சூழலில் பல்வேறு புதிய நிலைமைகள் உருவாகி வந்தன. இதனால் காலனிய ஆதிக்கத்தின் பிடி, படிப்படியாக தளர்ச்சியடையத் தொடங்கியது. சாம்ராஜ்யங்கள் சரியத் தொடங்கின. நாடுகளின் எல்லைக் கோடுகள் புதிதாக வரையப்பட்டன. புதிதாக பல 'தேச அரசுகள்' (Nation States) உருவாக்கப்பட்டன. இதிலும் பிரித்தாளும் தந்திரம் (Divide and Rule) மிகக் கவனமாகப் பிரயோகிக்கப்பட்டது. இன்றளவும் பல நாடுகள் அதற்கு இரையா கிக் கொண்டிருக்கின்றன என்பது கசப்பான அனுபவமாகும். பின் காலனிய உலகு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பாரதூரமானவை, பன்முகமானவை. அவை பெரிதும் காலனிய கால பிரச்சினைகளின் நீட்சியாகவும் அவற்றின் அடுத்தடுத்த கட்டங்களுமாகவே உள்ளன. இந்த நிலையில், உலகம் ஒரு புதிய மாற்றத்திற்கான எதிர்பார்ப்போடு காத்திருந்தது.

பகுதி – 03

மேலும் சில பின்னணித் தகவல்கள்

**கெடுபிடிப் போர் / பனிப்போர் (Cold War)**

1945–1991 வரையான காலப்பகுதி கெடுபிடிப் போர்க் காலமாகும். முதலாம் உலகப் போரும் இரண்டாம் உலகப் போரும் 20 ஆம் நூற்றாண்டின் பூகோள அரசியல் வரலாற்றின் (Geopolitical History) மிக முக்கியமான கருவறைகளாகும்.

தொடரும்...

# வன்னி யுத்தத்தில் இரசாயன ஆயுதம்



கடந்தவாரத் தொடர்ச்சி...

### புதுக்குடியிருப்பில் இரசாயன ஆயுதம்?

2009ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ம் திகதி, சிறிலங்கா இராணுவத்தின் 58வது டிவிசன் படையினர் புதுக்குடியிருப்பில் மேற்கொண்ட தாக்குதலில், விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளான கேணல் தீபன், கேணல் விதுஷா, கேணல் துர்கா, கேணல் நாகேஷ் உட்பட சுமார் 200 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருந்தது. அறிவித்ததோடு மாத்திரம் நின்றுவிடாமல், தம்மால் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் உடலங்களின் புகைப்படங்களையும், ஒளிப்படங் களையும் அது வெளியிட்டும் இருந்தது.

ஆனால், சிறிலங்கா இராணுவம் ஆரம்பத்தில் வெளியிட்ட அந்தப் புகைப்படங்கள், அருகில் இருந்து எடுக்கப்படாமல், சற்று தொலைவில் இருந்து எடுக்கப் பட்டவைகளாகவே காணப் பட்டன. அந்தப் புகைப்படங்களில் காணப்படும்உடலங்கள்வழமைக்கு மாறாக கருகிய, அல்லது திரவக எரிகாயங்களுடனான காட்சியினைக்கொண்டவைகளாக இருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து, புதுக் குடியிருப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்களைப் பாவித்தி ருந்தார்களா என்கின்றதான கேள்வி, உலகத் தமிழர் மனங்களில் ஏற்பட ஆரம்பித்தன. இந்தச்சம்பவம் நடைபெற்று3வருடங்களின்பின்னர் வெளியான சில புகைப்படங்கள் புதுக்குடியிருப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன என்பதை நிரூபிப்பதாகவே இருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மீது இரசாயன ஆயுதங்களைப் பாவித்துத் தாக்குதல் நடாத்திய சிறிலங்காப் படையினர், தொடர்ந்து அங்கு தங்கியிருக்கும் பொதுமக்கள் மீதும் இந்த இரசாயன ஆயுதத் தாக்குதலை அல்லது கிளஸ்டர் குண்டுத் தாக்குதலை மேற்கொள்வார்களா என்கின்றதான சந்தேகமும், புலம் பெயர்வாழ் தமிழ் மக்களின் உள்ளங்களை அந்த நேரத்தில் வாட்டிவதைக்க ஆரம்பித்திருந்தது. அதனைத் தொடர்ந்து புதுமாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்கால் போன்ற பாதுகாப்பு வலயப் பகுதிகளில் தங்கியிருந்த மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் நிற்பதாகக் கூறிக்கொண்டும், அந்த நேரத்தில் அங்கிருந்த மக்கள் தொகையை மிக மிகக் குறைவாக வெளியிட்டும் அந்தப் பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட பயங்கர ஆயுதங்களைப் பாவித்துத் தான் மேற்கொள்ள இருந்த மிக மோசமான ஒரு இன அழிப்பு நடவடிக்கைக்கு தளம் அமைத்திருந்தது சிறிலங்கா அரசாங்கம். தான் நினைத்ததை இறுதியில்செய்தும்முடித்திருந்தது. இப்படியான பின்னணியில்தான் இந்தத் தடைசெய்யப்பட்ட ஆயுத விவகாரம் மீண்டும் வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளது.

### கிளஸ்டர் குண்டுகள்

கிளஸ்டர் குண்டுகள் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற கொத்தனிக் குண்டுகள் என்பது ஒரு குண்டு வெடித்துச் சிதறி பல குண்டுகளாக பிரிந்து அவ்வாறு பிரிந்து செல்லும் குண்டுகள் ஒவ்வொன்றும் பின்னர் தனித்தனியாக வெடித்து மிகப் பெரிய அழிவினை ஏற்படுத்தும் ஒரு வகை வெடிபொருள். பெரும்பாலும் ஆகாய விமானத்தில் இருந்தே கிளஸ்டர் குண்டுகள் வீசப்படுவது வழக்கம். இருந்தபோதிலும் தரை யில் இருந்து ஏவப்படும் கிளஸ்டர் குண்டு வகைகளும் இருக்கவே செய்கின்றன.

இந்த கிளஸ்டர் குண்டுகளை முதன்முதலில் ஹிட்லரே உபயோகித்திருந்தார். Spreng bombe Dickwandig (SD-2) என்ற குறியீட்டுப் பெயரிலும் But terfly Bomb என்ற பொதுவான பெயரிலும் அழைக்கப்பட்ட கிளஸ்டர் குண்டுகளை 2ம் உலக யுத்தத்தின் பொழுது பொது மக்கள் மீதான தாக்குதல்களுக்கும், இராணுவ நிலைகள் மீதான தாக்குதல்களுக்கும் ஜேர்மனி உபயோகித்திருந்தது. அதனைத் தொடர்ந்து அமெரிக்கா சோவியத் ஒன்றியம் உட்பட பல்வேறு நாடுகளும் இந்த கிளஸ்டர் குண்டுகளை தமது சண்டைகளின் பொழுது பாவிக்க ஆரம்பித்திருந்தன. குறிப்பாக 1970ம் ஆண்டு முதல் 1990களின் ஆரம்பம் வரை இந்தக் கிளஸ்டர் குண்டுகள் அனேகமாக சண்டைகளில் ஈடுபட்ட அனைத்து நாடுகளி னாலும் மிக முக்கியமான ஆயுத மாகப் பாவிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுவாகவே வானில் இருந்து வீசப்படும் இந்த கிளஸ்டர் குண்டுகளை பீரங்கிகளில் இருந்து ஏவப்படும் செல்களின் வடிவில் அமெரிக்க இராணுவம் உருவாக்கியிருந்தது. இந்த வகை செல்களுக்கு ICM – Im proved Conventional Munitions என்று அமெரிக்க இராணுவம் பெயரிட்டிருந்தது. அதேவேளை ஆட்டிலறியில் இருந்து ஏவப்படும் இந்த கிளஸ்டர் குண்டுகளை அமெரிக்க வீரர்கள் பொப்கோர்ன் (popcorn) என்றும் மத்தாப்பு அல்லது பட்டாசுகள் (fire cracker) என்றும் செல்லமாக அழைப்பார்கள். மிகவும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த கிளஸ்டர் குண்டுகளை உலகில் 34 நாடுகள் தயாரித்ததாகவும் 23 நாடுகள் சண்டைகளின் பொழுது இந்த வகைக் குண்டுகளைப் பயன்படுத்தி யிருந்ததாகவும் பதிவுகள் தெரிவிக்கின்றன.

இந்த கிளஸ்டர் குண்டுகளில் இரசாயன ஆயுதங்களை இணைக்கும்தொழில்நுட்பத்தினை 1950களிலும், 60களிலும் சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் பயன்படுத்தியிருந்தன. பரவலாக எழுந்த கண்டனங்களைத் தொடர்ந்து இந்த இரண்டு நாடு களும் இந்த வகை குண்டுகளின் பாவனையைக் கைவிடுவதாக அறிவித்திருந்தன.

### எதிர்ப்புக்கள்

இருந்தபோதிலும்இந்தக்கிளஸ்டர் குண்டுகளின் பாவனைக்கு எதிராக 2000ம் ஆண்டுகளில் மிக மும்முரமான எதிர்ப்புக்கள் கிளம்ப ஆரம்பித்திருந்தன. கிளஸ்டர் குண்டுகள் ஒரு குறிப்பிட்ட இலக்கின் மீது ஏவப்பட்டாலும் அந்தக் குண்டுகள் வெடிக்கும் சந்தர்ப்பத்தில் அது குறிப்பிட்ட இலக்கைத் தாக்குவதுடன் தமது பணியினை முடித்துக்கொள்வது கிடையாது. ஏவப்படும் இலக்கினையும் கடந்து கிளஸ்டர்குண்டுகள் பரந்த அளவி லான பாதிப்பினை ஏற்படுத்திவிடும் சாத்தியம் இருப்பதால் கிளஸ்டர் குண்டுகளால் இராணுவ இலக் கிற்கு ஏற்படும் பாதிப்புக்களை விட சிவிலியன் இலக்குகளுக்கே அதிக பாதிப்புக்கள் ஏற்படுவதாக நடுநிலையான மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியிருந்தன.

அத்தோடு வானில் இருந்து வீசப்படும் இந்தக் கிளஸ்டர் குண்டுகள் மொத்தமாகவே அல்லது பகுதியாகவே வெடிக்காத பட்சத்தில் மண்ணுக்குள்ளும் மறைவிடங்களிலும் நீண்ட காலமாகத் தேங்கிக்கிடந்து அப்பாவிப் பொது மக்களுக்கு அல்லது சிறுவர்களுக்கு அதிக பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய சாந்தர்ப்பம் அதிகம் இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

உதாரணத்திற்கு 1960களின் நடுப்பகுதி முதல் 70களின் ஆரம்பம் வரை நடைபெற்ற வியட்னாம் யுத்தத்தின் பொழுது அமெரிக்கப்படையினர் எண்ணில டங்காத கிளஸ்டர் குண்டுகளை வியட்னாமில் வீசியிருந்தார்கள். அதில் வெடிக்காது விடப்பட்ட குண்டுகளால் இன்றைக்கும் அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது. வெடிக்காது கைவிடப்பட்ட குண்டுகளால் வருடம் ஒன்றிற்கு சராசரியாக 300 வியட்னாமியர்கள் பாதிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இது ஒரு உதாரணம்மாத்திரம்தான். உலகில் ஒவ்வொரு நாடும் சண்டைகளின் பொழுது பாவித்த கிளஸ்டர் குண்டுகளில் வெடிக்காமல் கிடக்கின்ற குண்டுகளால் யுத்தம் முடிவடைந்து பல வருடங்கள் கடந்த நிலையிலும் பாதிப்புகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இதனால் கிளஸ்டர் குண்டுப் பாவனை என்பதை மனிதத்திற்கு எதிரான ஒரு தாக்குதலாகவே இன்று நவீன உலகம் பார்க்க ஆரம்பித்துள்ளது.

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், Cluster Munition Coali tion(CMC) என்ற அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை உட்பட நூற்றிற்கும் மேற்பட்ட அமைப்புக்களும் உல கில் பிரபல்யமான பல மனித உரிமை ஆர்வலர்களும் கிளஸ்டர் குண்டுப் பாவனைக்கு எதிராகக் குரல் எழுப்பியிருந்தார்கள். கிளஸ்டர் குண்டுப் பாவனையை முற்றாகவே தடைசெய்யவேண்டும் என்று Handicap International என்ற அமைப்பு மிக மும்முரமாகக் கோரிக்கையை முன்வைத்தி ருந்ததுடன் தனது கோரிக்கைக்கு ஆதரவாக இலட்சக்கணக்கான கையெழுத் துக்களை 2005ம் ஆண்டு முதல் சேகரித்தும் வந்தது.

உலக அளவில் இந்த கிளஸ்டர் குண்டுகளினால் பாதிக்கப்பட்ட 13,306 உடல் ஊனமுற்றவர்களை Handicap International என்ற இந்த அமைப்பு பேணி வருகின்றது. இவர்களில் 98 வீதமானவர்கள் சிவிலியன் என்பதுடன் 27 வீதமானவர்கள் சிறுவர்கள் என்பது, கிளஸ்டர் குண்டுகள் உலகில் முற்றாகவே தடைசெய்யப்படவேண்டும் என்ற வாதத்தை அதிக வலுவாக்கி யிருந்தது. இதேபோன்று Hu man Rights Watch, Landmine Action, Mines Action Canada போன்ற சர்வதேச அமைப்புக்களும் கிளஸ்டர் குண்டுகளுக்கு எதிராகக் குரல்கொடுத்திருந்தன.

### டுப்ளின் உடன்பாடு

உலகம் முழுவதிலும் பரவலாக எழுந்த இந்த எதிர்ப்புக் குரல்கள் காரணமாக கிளஸ்டர் குண்டு பாவனைக்கு எதிரான சர்வதேசத் தடை ஒப்பந்தம் Convention on Cluster Munitions (CCM) 2008ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி அயர்லாந்தின் தலைநகர் டுப்ளினில்ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த சர்வதேச உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு இதுவரை 101 நாடுகள் கையொப்பம் இட்டுள்ளதுடன் 71 நாடுகள் இந்த ஒப்பந்தத்தை தமது நாடுகள் தமது சட்டவரைபுகளிலும் உள்ளடக்கியுள்ளன.

இப்படியான பின்னணியில்தான் வன்னி யுத்தத்தில் சிறிலங்கா இராணுவம் கிளஸ்டர் குண்டுகளைப் பாவித்திருப்பது பற்றி வெளியான செய்திகளை நாம் பார்த்தாகவேண்டி இருக்கின்றது.

**தொடரும்...**

**சுழியோடி**

# இலங்கையில் அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகள், சட்டம் கடுமையாக்கப்படவேண்டும் – இல்லையேல் ஆபத்து



இன்றைய நவீன உலகத்தில் உலகளாவிய ரீதியிலும். நாடளாவிய ரீதியிலும் பாலியல் வன்கொடுமை என்பது சர்வ சாதாரணமானதாக மாறிவிட்டது. குறிப்பாக கொரோனா வைரஸ் காலப்பகுதியில் பாலியல் வன்கொடுமைகளோடு சேர்ந்து குடும்ப வன்முறைகளோ தலைவிரித்து ஆடுகின்றது. இதனால் தற்கொலை மரணங்களும் அதிகரித்து கொண்டே செல்கின்றது. விடுதலைப்புலிகள் இருந்துவந்த காலப்பகுதிகளில் பாலியல் வன்கொடுமை என்பதற்கு வடகிழக்கு பகுதிகளில் இடமே இல்லாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் பாலியல் வன்கொடுமையின் ஊடாக. இனப்படுகொலையின் ஊடாக இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தை சர்வதேச நாடுகள் உதவியோடு வெற்றி கண்ட இலங்கை அரசு. குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் மசாஜ் நிலையங்கள். விபச்சார நிலையங்கள் போன்றவற்றை மறைமுகமாக இயங்கி வருவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதோடு போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துள்ளது. போதையில் இளைஞர்கள் இவ்வாறான தீய செயல்களுக்குள் களமிறக்கப் படுகின்றார்கள்.

வடகிழக்குப் பகுதிகளில் கல்வித் தரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதிலும் மிகக் கொடுமையான விடயம் என்னவென்றால் சிறுவர் துஸ்பிரயோகம் என்பது இரண்டு வகையாக இடம்பெறுகின்றது. பாடசாலைக்கு செல்லும் சிறுவர்கள் பணியில் அமர்த்தப்படுகின்றார்கள் மற்றும் பாலியல் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றார்கள். இதனால் ஒரு சமுதாயம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. சிறுவயது திருமணம்.காதல்விவகாரம்.பாடசாலை ஆசிரியர்களினால் துஸ்பிரயோகம். வேலை அலுவலகர்களினால் துஸ்பிரயோகம். குடும்ப வன்முறைகள் உருவாக்கப்பட்டு பாலியல் இலஞ்சம் கோரப்படுகிறது. முகநூல்கள் குறிப்பாக இன்போமேசன் டெக்னோலஜி போன்ற விடயங்களினாலும் சமுதாயத்தில் பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தமிழ் கலாசாரத்தின்படி ஒருவருக்கு ஒருத்தி என்ற திருமணமே இடம்பெறுகிறது. அது சட்டம். சொந்த மனைவியை விட்டுவிட்டு விபச்சார விடுதிகளுக்கும் விலைமாதுகளுடன் தொடர்பை ஏற்படுத்துதல் குடும்ப வன்முறைகள் உருவாகுவதற்கு காரணமாக அமைகிறது. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ஊருக்கொரு மகளிர் அமைப்பு இருக்கிறது. சமூக செயற்பாட்டாளர்கள் இருக்கிறார்கள். இவ்வாறான பாலியல் வன்முறைகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பெண்களுக்கு எதிரான அநீதிகளுக்காக குரல் கொடுக்கும் ஒரு சிலரைத் தவிர. பல அமைப்புக்கள் முன்வருவதில்லை. சமூகங்களுக்கிடையே பாலியல் ரீதியான சமூக விளக்கங்கள் கொடுப்பதில்லை. இதனால் பருவ மங்கைகள் அநாவசியமான செயற்பாடுகளில் களமிறங்கி தமது வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நிற்கிறார்கள். இளைஞர்கள் தவறான பாதையில் பயணிக்கின்றனர். தொலைபேசி இவர்களின் தவறான நடத்தைகளுக்கு பெரிதும் துணையாக இருக்கிறது அல்லது இவர்களால் பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் உண்மை. இப்படிப்பட்டவர்களே கூடுதல் வன்முறைகளிலும் இறங்கி. இவர்களுடைய வாழ்க்கை தெருவிற்கு வரக் காரணமாக அமைகின்றது. அரசாங்கம் இதனைப் பாராமுகமாக இருப்பதனால் நாடளாவிய ரீதியில் பாலியல் தொழில் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இவர்கள் கைது செய்யப்பட்டாலும் இவர்களுக்குத் தண்டனையாக பணம் தான் அறவிடப்படுகின்றது என்பது கவலை தரும் விடயம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பாலியல் வன்கொடுமை என நாளாந்தம் வழக்குகள் விசாரனைக்கு வரவே செய்கின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக இருந்தால் ஒரு நாட்டின் சமுதாயம் எவ்வாறு தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவது. சுய ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது. சட்டங்கள் கடுமையாக்கப்படவேண்டும். குடும்ப வன்முறைகள் என்ற ஒன்று ஒரு புறத்திலிருந்தாலும் அதனை ஓரளவு கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் பாலியல் வன்முறைகள். பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பதை கட்டுப்படுத்தத் தவறின் குறித்த இனத்தின் கலை. கலாச்சாரம் என்பது பாதிப்புக்குள்ளாக்கப்படும்.

ஆகவேபாடசாலைகள்மட்டத்திலிருந்தே பாலியல் துஷ்பிரயோகங்களினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் வலியுறுத்தப்படவேண்டும். இதில் வெட்கமடைவதற்கு ஒன்றுமில்லை. மாணவர்களுக்கான விழிப்புணர்வுகள் விஸ்தரிக்கப்படவேண்டும். சமூக ஆர்வலர்களினால் வலியுறுத்தப்பட வேண்டும். ஒரு பெண் சுதந்திரமாக இந்த நாட்டில் நடமாடித்திரிவதற்கு வழிவகைகள் வகுத்துக்கொடுக்கப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் இராப் பொழுதிலும் ஒரு பெண் தனியாக நடமாடித்திரியக்கூடிய ஒரு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. அதனது மறுவடிவம் என்னவென்றால் கூடுதல் சுதந்திரம் அங்கு இருந்தது என்பதே. வேலியே பயிரை மேய்கின்ற நிலைப்பாடே இன்று சம்பவித்துக்கொண்டிருக்கின்றது.

குறிப்பாக பராமரிப்பு இல்லங்களில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் தாய் தந்தையின்றி வளர்ந்து வருகின்றார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஒருபுறம். பாலியல் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மறுபுறம். இன்னும் சில கூறக்கூட நா கூசுகின்ற காரணிகளால் இம் மண்ணில் அவதரித்த அன்புக் குழந்தைகள் என ஆயிரக்கணக்கானோர் பல சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் வாழ்கிறார்கள். அவர்களை அன்புடன் பல நல் உள்ளங்கள் வளர்ப்பதற்காக அழைத்துச் செல்கின்றனர். இதே வேளைகருக்கலைப்புநடவடிக்கைகளில் பலர் ஈடுபட்டு வருவதாக புள்ளிவரைபுகள் தெரிவிக்கின்றன. இத்தகையதொரு நிலைப்பாடு ஏன் இந்த நாட்டில் உருவாக்கப்படவேண்டும்.

கருக்கலைப்புக்கு உச்சபட்ச தண்டனை இந்த நாட்டில் உருவாக்கப்படவேண்டும். இவ்வாறான தவறான செயற்பாடுகள் இந்த நாட்டினுடைய வளர்ச்சியை குன்றச்செய்யும். இந்நாட்டின் கலை. கலாச்சாரம். பாரம்பரியம். சுய ஒழுக்கம் என்பவற்றை கேள்விக்குறியாக்கும். ஒரு இனத்தை அழிப்பதற்கு எப்படி எப்படியெல்லாம்மாற்றங்களைகொண்டு வர வேண்டும் என்று இலங்கை அரசும் செயற்படாமலுமில்லை. அரசுகளின் கடந்தகால செயற்பாடுகளில் இருந்து நாம் பாடம் கற்றுக்கொண்டிருக்கிறோம். யுத்தம் முடிந்த பின்னரும் இந்த நாட்டில் பாலியல் வன்முறைகள் உருவெடுப்பது. அதற்கு ஏதுவான காரணிகளை உருவாக்குவது என்பது ஏட்புடையது அல்ல.

சமூக ஆர்வலர்கள் தங்களை அரசியல் ரீதியாக வளர்த்துக்கொள்ள முற்படுகின்றார்களே தவிர. மக்கள் நலன் மீது அக்கறையுடன் செயற்படவில்லை என்பதனையே இத்தகையதொரு செயற்பாடு எடுத்துக்காட்டுகிறது. தற்பொழுது இலங்கையில் அனைத்து பாகங்களிலும் பாலியல் தொழில் செய்பவர்களின் நடமாட்டத்தை பொது இடங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. பஸ்தரிப்பு நிலையங்களிலும் மக்கள் நடமாடும் பகுதிகளிலும் இவர்களின் நடமாட்டத்தை அதிகமாக அவதானிக்க முடிகிறது. சட்ட ரீதியில் இவர்கள் கைது செய்யப்பட்டாலும் ஓரிரு தினங்களில் வெளியில் வந்து விடுகிறார்கள். இவர்களால் இளம் சமுதாயமே பாதிக்கப்படுகின்றது. இதனால் அபாயகரமான நோய்களும் உருவாகிறது.

ஆகவே இந்த பாலியல் வன்கொடுமைகளில் இருந்து மக்களை பாதுகாக்க அரசின் வேலைத்திட்டங்கள் இன்னும் விஸ்தரிக்கப்படவேண்டும். இனம் மதம் மொழி கடந்து அனைவரும் ஒன்றிணைந்து சமூக ரீதியாகச் செயற்படவேண்டும். கலை. கலாச்சாரம் போன்றவை பாதுகாக்கப்படுமாக இருந்தால் மட்டுமே குறிப்பிட்ட ஒரு இனத்தின் இருப்பைக் கூடத் தக்கவைத்துக்கொள்ள முடியும். திட்டமிட்ட அடிப்படையில் பெண் இனத்திற்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படுகின்ற பாலியல் வன்முறைகளை விரட்டி அடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாகவே பெண் சமுதாயம் பாதுகாப்பானதொரு நிலைக்குக்கொண்டு செல்லப்படும்.

**நெற்றிப்பொறியன்**

## பயங்கரமாகும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

கடந்தவாரத் தொடர்ச்சி...

தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த கடந்த அரசாங்கம். தேசிய பாதுகாப்புக்கும் பொது மக்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தத்தக்க வகையில் தகவல்களைப் பெறுதல் அவற்றை பரிமாறுதல் என்பன பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் குற்றச் செயல்களாகக் குறிப்பிட்டிருப்பது தொடர்பில் விமர்சனங்களும் கண்டனங்களும் எழுந்திருக்கின்றன. மனித உரிமைகள் மேம்படுத்தப்பட வேண்டும். ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பவற்றுடன் நாட்டில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டமும் நீக்கப்பட வேண்டும் என்று ஜிஎஸ்பி சலுகையை வழங்குவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் நல்லாட்சி அரசாங்கத்திற்கு நிபந்தனை விதித்திருந்தது.

இலங்கைக்கு ஜீ.எஸ்.பீ. சலுகையை வழங்குவதற்கான முடிவை மேற்கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அமைச்சரவை அவசர அவசரமாக கடந்த மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. இந்த அங்கீகாரத்தின் மூலம் நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாமற் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்குப் பதிலாக சர்வதேச நியமங்களுக்கு அமைவாகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படுவதாகவும் அரசாங்கம் வெளிப்படுத்தியிருந்தது. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழும். இரண்டாயிரத்து பதினேழும் (1977 உம் 2017 உம்) ஆனால் இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மூலம். உண்மையாகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் அகற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் பலராலும் முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

கடந்த 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி நாட்டின் எதிர்க் கட்சியாகத் திகழ்ந்த காலப்பகுதியிலேயே 1978 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்காலிக சட்டமாகக் கொண்டு வரப்பட்டு 1979 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அப்போது அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். இவ்வாறு தமிழ்த் தலைவர் ஒருவர் எதிர்க் கட்சித் தலைவராகப் பதவியேற்றிருந்த காலப்பகுதியில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு. மற்றுமொரு தமிழ்த் தலைவராகிய இராசவரோதயம் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலப்பகுதியில். அதற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போதைய சூழலில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு. எதிர்க் கட்சித் தலைவராகிய அமிர்தலிங்கத்தினால் முடியாமற் போயிருந்தது. அன்றைய சூழல் அதற்கு ஏற்றதாக இருக்கவில்லை.

ஆனால் இப்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு இணையான அம்சங்களைக் கொண்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு. தங்களுடைய பரிந்துரைகளைக் கவனத்திற் கொள்ளாமலேயே கடந்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதைக் கண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிர்ச்சியையும் கண்டனத்தையும் வெளியிட்டிருந்தது. ஆனால் தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் சாதாரண பொதுமக்கள் அத்துடன். அரசுக்கு எதிரான மாற்று கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களையும் இலகுவில் தண்டிக்கத்தக்க வகையில் இந்தச் சட்டத்தில் காணப்படுகின்ற அம்சங்களை நீக்குவதில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா.சம்பந்தன் வெற்றி பெறுவாரா இல்லையா என்பது தெரியவில்லை. தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல். நாட்டு மக்களுக்கும் இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் நன்மை கிடைக்க வழிவகைகள் ஏற்படுத்தப்படுமா என்பதும் தெரியவில்லை.

# வெலிக்கட சிறைச்சாலை படுகொலையின் ஒரு சாட்சியம்

## பேராசிரியர் நித்தியானந்தனின் நேர்காணல்

கடந்தவார தொடர்ச்சி....

**கேள்வி:-** அத்துடன் இந்த இனவன்முறைகள் ஆரம்பத்திலிருந்தே பிரித்தானியர்கள் தங்களுடைய காலணித்துவ ஆட்சியை கொடுத்துவிட்டு வந்ததன் பின்னர் ஆரம்பித்த இந்த இனவன்முறைகள் இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. மிகப்பெரிய ஒரு சோகமான விடயம். வெலிகட சிறைக்கொலை உள்ளது அதை நீங்கள் நேரடியாக கண்முன்னே பார்த்துள்ளீர்கள். வெலிக்கட சிறைச்சாலை கொலைகள் எவ்வாறு நிகழ்ந்தது?, எப்படி அதற்குள்ளே ஆயுதங்கள் வந்தன?, அதற்கான வாய்ப்புக்களை எப்படி உருவாக்கினார்கள்?

**பதில்:-** வெலிக்கட சிறைச்சாலையில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று பிரதான சிறைச்சாலை வெலிக்கட மற்றையது மகசின்பிரசின்ட் என்று கூறக்கூடிய இன்னுமொரு பகுதி. நாங்கள் உண்மையில் மகசின்பிரசின்டில் சிறைவைக்கப்பட்டிருந்தோம். என்னுடன் வைத்தியர் ஜெயகுல ராஜா இருந்தார். பின்னர் பிரதான சிறைச்சாலைக்கு நாங்கள் மாற்றப்பட்டோம். வெலிக்கட சிறைச்சாலைகிட்டத்தட்ட 800கைதிகளை கொண்டமைந்த இலங்கையின் மிகப்பெரிய சிறைச்சாலையுமாகும். அங்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கைதிகளாக நாங்கள் இருந்தோம். கிட்டத்தட்ட 70 பேருக்கும் மேல் அங்கே சிறை வைக்கப்பட்டிருந்தோம். பொழுது நாங்கள் ஜங் ஒப்படன்ட்டஸ் என்றவொரு சிறைச்சாலைக்குள்ளே வைக்கப்பட்டிருந்தோம். அது உண்மையிலே இளம் பிள்ளைகளை குற்றம் செய்த சிறுவர்களை தடுத்து வைப்பதற்கான சிறைக்கூடமது. அதனுடைய சுவர்கள் மிக உயரமானவை. மிகநீண்ட உயரத்தில் அமைக்கப்பட்ட ஜன்னலின் வழியாக கொஞ்சம் வெளிச்சம் தெரியும். மற்றும்படி கிட்டத்தட்ட ஒரு இருண்ட சிறைக்கூடம் போலவே அந்த ஜங் ஒப்படன்ட்டஸில் இருந்தது. இந்த சிறைச்சாலைக்குள் பாதர் சிங்கராஜ, பாதர் சின்ராசா என்னும் இருவரும் கத்தோலிக்க பாதிரிமார்கள். இதனை விட மெதரிஸ் பாதிரிகளான ஜெயதிலகராசா இருந்தார். அவருடைய சகோதரரான ஜெயகுலராஜா இருந்தார். மற்றும் நான் ஆக 5 பேர் மட்டுமே அந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தோம். இது கிட்டத்தட்ட ஹை செக்கியூரிட்டி உடைய அதியுயர் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தோம். வெலிகட சிறைச்சாலையினுடைய பிரதான வாயினில் இருந்து எங்களுடைய சிறைச்சாலைக்கு வருவதென்றால் 15 வாயில்கள் வரை அவர்கள் கடந்து வர வேண்டும். பொதுவான கை-திகள் யாருமே எங்களை பார்க்க முடியாது. மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட சிறைக்கூடமது. அங்கே குறிக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட சில அரசியல் கை-திகளும் ஜெயிலர்ஸ்கள் மட்டுமே அங்கே வந்துபோவார்கள். இந்நிலையில் 25 ஆம் திகதி பகல் 2 மணியளவில் விசில் சத்தங்கள், கூச்சல் குரலும் அந்த



அன்று 2 மணிக்கு நடந்தது ஒரு 15, 20 நிமிடங்களுக்குள் 35 தமிழ் கைதிகளும் கொல்லப்பட்டுவிட்டார்கள். அங்கு இருந்தவர்கள் சாதாரண சட்டங்களின் கீழ் அடைத்துவைக்கப்பட்டுள்ள குற்றவாளிகள் தான். அவர்கள் தானாகவே ஜெயிலை உடைத்து சென்றிருக்க முடியாது. சிறை அதிகாரிகளினுடைய அனுசரணையுடன் அவர்கள் அதை உடைத்து சென்று அதுவும் ஒவ்வொரு செல்லிலும் ஒரு தனி நபரே இருந்தார்கள் அங்கே தாக்குவதற்கு எதுவுமே கிரவுன்ட் புளோரிலே ஒவ்வொரு செல்லிலும் ஒரு தனி ஆளாக அடைத்து வைக்கப்பட்டிருந்தோம். அப்பொழுது தான் டேவிட் ஐயா Dr. காந்திதிலே மற்றும் நிறைய கைதிகளை அங்கு கொண்டு வந்து எங்களது செல்லிலே அடைத்தார்கள். மேல் மாடி ஒரு மண்டபம் போல் அமைந்திருந்தது. எங்கள் அனைவரையும் மேலே ஏற்றிவிட்டு, கீழே உள்ள செல்களிலே ஏனைய இடங்களில் இருந்து வந்த கைதிகளை ஒவ்வொரு செல்லிலும் மூன்று பேராக போட்டிருந்தார்கள். கிட்டத்தட்ட

அதிலே குட்டிமணி தங்கத்துரை ஜகன் போன்றோர் அவர்களின்வழக்குவிசாரணை முடிந்து அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளாக அவர்கள் வெலிக்கடயில் இருந்தார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நாங்கள் அங்கே இருந்தோம். அவசரகால சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களும் இருந்தார்கள். இதைவிட அவசரகால சட்டத்தின் கீழும் இல்லாமல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் அல்லாமல் எந்தவித குற்ற விசாரணைகளும் குற்ற பத்திரங்களும் தாக்கல் செய்யப்படாத நிலையிலே பல தமிழ் இலங்கையர்கள் அங்கே கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

இதிலேநாங்கள்கிட்டத்தட்ட3பகுதிகளிலே தமிழ் அரசியல் கைதிகள் சிறையிலே வைக்கப்பட்டிருந்தார்கள். டீ செல் என்னும் ஒருசெல் அதிலே 6 அரசியல் கைதிகள் வைக்கப்பட்டிருந்தார்கள். C3 என்ற ஒரு செல் இருந்தது. D3 என்று இன்னுமொரு செல் இருந்தது. C3 என்ற செல்லிலே தான் குட்டிமணி, தங்கத்துரை, ஜகன் போன்ற அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். யூலை 25 ஆம் திகதி இந்த தாக்குதல் நடத்தப்பட்ட பொழுது டீ செல்லிலிருந்த 6 அரசியல் கைதிகளும் D3 யில் இருந்த 29 அரசியல் கைதிகளுமாக 35 அரசியல் கைதிகள் கொல்லப்பட்டுவிட்டார்கள். அந்த படுகொலைகள் எவ்வாறு நடைபெற்றது என்று சொல்வதற்கு அங்கு யாருமே மிஞ்சியிருக்கவில்லை. ஆனால் 25 ஆம் திகதி நடைபெற்ற அந்த கொலைகளுக்கு பின் 2 நாட்கள் கழித்து 27 ஆம் திகதி நடைபெற்ற படுகொலையிலிருந்து தப்பிய சிலரில் நானும் ஒருவன்.

எனவே 25ஆம் திகதி நடைபெற்ற கொலையை பற்றி கூற ஒருவருமே மிஞ்சவில்லை. அந்த 2 செல்களிலும் இருந்த அனைத்து கைதிகளுமே கொல்லப்பட்டுவிட்டார்கள். மறுநாள் மிகவும் பதட்டமான சூழ்நிலை அங்கே காணப்பட்டது. உண்மையில் 25ஆம் திகதி இந்த படுகொலைகள் நடைபெற்ற சிறைச்சாலையில் எழுந்ததை நாங்கள் பார்த்தோம். சிறைக்கம்பிகளுக்கூடாக நாங்கள் பார்த்த பொழுது காவல் அதிகாரிகள் ஓடுகின்ற காட்சியைத் தான் நாங்கள் பார்க்க முடிந்ததே தவிர எங்களுடைய சிறைச்சாலைக்குள் இருந்து குட்டிமணி தங்கத்துரை ஆகியோர் அடைக்கப்பட்டிருந்த பகுதியை எங்களால் பார்க்க முடியாது சுவர்கள் மறைத்துவிடுகின்ற நிலை. நான் 2 சந்தர்ப்பங்களில் மாத்திரமே குட்டிமணியை பார்த்தேன். ஒன்று சட்ட வழக்கறிஞர்கள் அரசியல் கைதிகளை வந்து சந்திக்கும் பொழுது 2 சந்தர்ப்பங்களில் அவர்களை நானும் சந்திக்க சென்ற பொழுது பார்த்திருக்கின்றேன். தங்கத்துரையை நான் ஒரு முறை மாத்திரம் பார்த்திருக்கிறேன். சிங்கள பெருநாளின் போது சகல அரச கைதிகளுக்கும் வெளியில் இருந்து உறவினர்கள் சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பது வழக்கம்.

ஆனால் அந்த குறிக்கப்பட்ட தினத்தில் தங்கத்துறைக்கு சாப்பாடு கொண்டு வந்து கொடுக்கப்பட்ட பொழுது அந்த சிறை அதிகாரி அவருக்கு கொடுக்க மறுத்த பொழுது தங்கத்துறை அந்த அதிகாரியுடன் சண்டைபிடித்துக்கொண்டிருந்தார். ஆனால் அவர் கூறினார் இது சிங்கள மக்களுக்கு மட்டும் உரிய ஒரு பெருநாள். உங்களுக்கு வேறொரு நாள் இருக்கிறது அந்த நாளில் தான் உங்களுக்கு சாப்பாடு கொண்டுவர அனுமதிக்கலாம் என்று அவர் கூறிய பொழுது தான் நான் தங்கத்துறையை சிறைக்குள்ளே பார்த்தேன்.

எனவே இந்த ஜங் ஒபன்டன்ஸ் என்ற செல்லுக்குள் நாங்கள் இருந்து பார்த்த பொழுது செப்பன்ஸ் செக்சன் எங்களுக்கு தெரியாது. ஆனால் நாங்கள் நினைத்தோம் அங்கு இருக்கின்ற கைதிகள் ஏதும் ஸ்போட்ஸ் நடத்துகின்றார்களோ என்றவாறு தான் தெரிந்தது. ஏனென்றால் சத்தமும் விசிலும் கூச்சலும் ஒரு உற்சாகமான ஒரு நிகழ்ச்சி நடப்பதை போன்று இருந்தது.

இருந்திருக்காது. குறிப்பாக எங்களுக்கு ஒரு சின்ன வாளி ஒன்று சிறுநீர் கழிப்பதற்காக தரப்பட்டிருந்த ஒரு வாளி மட்டும் தான் ஒருவேளை கையில் எடுத்து தாக்குவதற்கு பாவித்திருக்கக்கூடிய ஒரே ஒரு சாதனமாக இருந்திருக்க வேண்டும். சில நிமிடங்களுக்குள்ளேயே அவர்கள் அனைவருமே கொல்லப்பட்டுவிட்டார்கள். ஒரு சின்னப்பையன் குருநகரிலே கைது செய்யப்பட்ட பையன் தான் இறுதியாக கொல்லப்பட்டுவிட்டதாக அங்கே கதைத்தார்கள். அது எந்தளவுக்கு உண்மை என்று எனக்குத்தெரியாது. அன்று அந்த கொலைகள் நடந்து முடிந்தபின் சாதாரணமாக 7 மணி வரையிலும் பொது அறையிலே இருக்கலாம். 7 மணிக்குப்பின் தான் அவர்கள் எங்களை தனி செல்களிற்குள்ளே பூட்டுவார்கள்.

ஆனால் அன்று 5 மணியளவிலே சிறை அதிகாரிகள் எங்களை சிறைக்குள்ளே அடைத்துவிட்டார்கள். அப்பொழுதும் 35 பேர் அங்கே கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. அங்கு சிறை அதிகாரி ஒருவர் எங்கள் மீது அன்பானவர். அவர் சில கை சைகைகள் மூலம் எனக்கு அதை விளங்கப்படுத்தினார். ஆனால் சிறைச்சாலைக்குள் படுகொலைகள் நடக்க முடியும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை. சிறைக்கூடங்கள் நிதியமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றன. இலங்கையின் நிதியமைச்சின் கீழ் அதியுயர் பாதுகாப்பின் கீழ் இருக்கின்ற நாங்கள் கொல்லப்படுவோம் என்று நான் ஒருபோதுமே கருதியிருக்க முடியாது.

மறுநாள் 26ஆம் திகதி பயங்கரமான அமைதியான குழப்பமான நிலை நிலவியது. இரு செல்களிலும் உள்ளவர்கள் முழுவதுமாக கொல்லப்பட்ட பின்னர் மீதி வெலிக்கட சிறைச்சாலையில் இருந்த கைதிகளை எங்களுடைய செல்லுக்குள் கொண்டு வந்து சேர்த்தார்கள். அது இரண்டு மாடி கட்டடம் நாங்கள்

2மணியளவில் அன்று கூச்சல் எழ ஆரம்பித்தது. எங்களுக்கு எழுதுவதற்காக மிக நீண்ட போராட்டத்தின் பின் 2 டெஸ்க் வழங்கப்பட்டிருந்தன. அதன் மீது ஏறி நான் பார்த்த பொழுது நாற்றுக்கணக்கான சிங்கள கைதிகள் அந்த சுவரைத் தாண்டி எங்களுக்கு கீழே உள்ள அந்த வாயிலை உடைக்க வருவதை நான் பார்க்கிறேன். வெளியிலே இருக்கும் சிறை ஜெயிலர் சாவியைஉடனடியாககொடுத்துவிடுகிறார். ஆனால் அந்த சாவி கொத்தில் 20, 25 சாவிகளுக்கு மேல் இருந்தபடியால் எந்த சாவி இந்த குறிக்கப்பட்ட பூட்டிற்கு பொருந்தும் என்று அந்த கைதிகளுக்கு தெரியாது அவர்கள் தடுமாறிக் கொண்டிருந்தபொழுது பூட்டை அவர்கள் உடைக்க ஆரம்பிக்கிறார்கள். 800 பேரிற்கு சமையல் செய்கின்ற டிப்பார்ட்மன்ட் மிக அண்மையில் இருக்கிறது. அந்த சமையலறைக் கூடத்திற்கு பாவிக்கின்ற இரும்புகள் பெரிய அண்டாக்களை தாக்குவதற்கான இரும்புத்தடிகள் போன்றவற்றை அவர்கள் அனைவரும் கையில் வைத்திருந்தார்கள். இதைவிட அங்கே விறகுகளை கொத்துவதற்காக பாவித்த கோடரிகளையும் அவர்கள் கொண்டிருந்தார்கள். எனவே தாருமாறாக அந்த பூட்டு உடைக்கப்பட்டு அவர்கள் வெள்ளமாக உள்ளே புகுகின்றார்கள் உள்ளே வந்து கிரவுண்ட் புளோரில் உள்ள செல்களை உடைக்க ஆரம்பித்துவிட்டார்கள். அது மிக சாதாரணமான பூட்டுகள் தான் சில தமிழ் இளைஞர்கள் தங்களது வெட்சீட்டுகளை அந்த இரும்புக்கம்பிகளில் கட்டி இழுத்துப்பிடித்துக்கொண்டதனால் அந்த சிறைக்கதவுகள் உடைந்தாலும் அவர்கள் திறக்கமுடியாத அளவிற்கு அவர்கள் மூடிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். சில இடங்களில் பூட்டு உடைந்துவிட்டாலும் அந்த கொழுக்கி கம்பிகள் வளைந்துவிட்டதால் அவர்களால் திறக்க முடியாமல் சில செல்களிலே இருந்த தமிழ் இளைஞர்கள் தப்பித்துவிட்டார்கள்.

தொடரும்...




## மீண்டும் திரைப்படத்தில் ஜோடி சேரும் சூர்யா – ஜோதிகா?



சூர்யாவும், ஜோதிகாவும் பல ஆண்டுகளுக்கு பின்னர் திரைப்படத்தின் மீண்டும் இணைந்து நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 1999 ஆம் ஆண்டு 'பூவெல்லாம் கேட்டுப்பார்' என்ற திரைப் படத்தில் இருவரும் முதன்முறையாக ஜோடியாக நடித்தனர். அதை தொடர்ந்து உயிரிலே கலந்தது, காக்க காக்க, பேரழகன், மாயாவி, ஜுன் ஆர் மற்றும் சில்லுனு ஒரு காதல் ஆகிய திரைப்படங்களில் சேர்ந்து நடித்தனர்.

சில்லுனு ஒரு காதல் படத்திற்குப் பிறகு கடந்த 2006 ஆம் ஆண்டு இருவரும் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்குப் பின்னர் நடிப்பதிலிருந்து விலகியிருந்த ஜோதிகா, கடந்த 2016 ஆம் ஆண்டு மீண்டும் திரைத் துறையில் களமிறங்கினார். அந்தவகையில் தற்போது சிறந்த கதையம்சம் கொண்ட தரமான படங்களில் நடித்து மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகின்றார்.

இந்நிலையில் திரைப்பட தயாரிப்பாளர் அஞ்சலிமேனன் தயாரிக்கவுள்ள புதிய திரைப்படத்தில் சூர்யாவும், ஜோதிகாவும் சேர்ந்து நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இத் தகவலானது சூர்யா மற்றும் ஜோதிகா ரசிகர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அமெரிக்க தேர்தலும் ஆர்.ஜே பாலாஜியின் மூக்குத்தி அம்மனும்!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோபிடன் வெற்றி பெற்றுள்ளார் என்பதும், துணை ஜனாதிபதியாக இந்தியவம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரீஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது அனைவரும் அறிந்ததே.

இந் நிலையில் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா நடித்த 'மூக்குத்தி அம்மன்' படத்தை இயக்கிய ஆர்ஜே பாலாஜி தனது சமூக வலைத்தள பக்கத்தில் 'மூக்குத்தி அம்மன்' துணையால் வெற்றி பெற்ற அமெரிக்க அதிபர் மற்றும் துணை அதிபருக்கு வாழ்த்துக்கள் என பதிவு செய்துள்ளார்.

மேலும் மூக்குத்தி அம்மன் அவர்கள் இருக்கும் ஆசி வழங்குவது போன்ற புகைப்படத்தையும் பதிவு செய்துள்ளார். ஆர்ஜே பாலாஜியின் இந்த விளம்பர யுக்தி அனைவரையும் கவர்ந்துள்ளது.

மூக்குத்தி அம்மன்' திரைப்படம் வரும் 14ஆம் திகதி ஓடிடியில் தீபாவளி விருந்தாக வெளியாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




## பிரபல நடிகர் சிரஞ்சீவிக்கு கொரோனா!

பிரபல தெலுங்கு நடிகர் சிரஞ்சீவிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. தெலுங்குத் திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சிரஞ்சீவி . இவர் தற்போது 'ஆச்சார்யா' என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.



பிரபல இயக்குனர் கொரட்டலா சிவா இயக்கி வரும் இந்த திரைப்படத்தில் அவருக்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்க உள்ளார். சிரஞ்சீவியின் 65 ஆவது பிறந்தநாள் மற்றும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆச்சார்யா படத்தின் மோஷன் போஸ்டரைப் படக்குழு வெளியிட்டனர்.

இந்நிலையில் கொரோனா காரணமாக படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. தற்போது தளர்வுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் நவம்பர் 9 ஆம் திகதி மீண்டும் படப்பிடிப்பு தொடங்க இருந்தது.

இந்நிலையில் படப்பிடிப்புக்கு முன்னர் சிரஞ்சீவி உள்ளிட்ட படக்குழுவினர்க்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் சிரஞ்சீவிக்கு தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

இதையடுத்து அவர் தன்னைத் தானே வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். மேலும் தன்னை சந்தித்தவர்கள் அனைவரும் தனிமைப்படுத்திக் கொண்டு சோதனை செய்துகொள்ளும் படி கேட்டுக்கொண்டுள்ளார்.

## கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கும் நயன்தாரா.!



தமிழ் சினிமாவின் நடிகைகள் இந்திய அளவில் மிகவும் பிரபலமாக விளங்குகின்றனர். குறிப்பாக நயன்தாரா, காஜல், சமந்தா உள்ளிட்ட நடிகைகளுக்கு இந்தியளவில் ரசிகர்கள் காணப்படுகின்றனர். மேலும் இவர்களின் சம்பளம் படத்திற்கு படம் மாற்ற படுகிறது. படம் வெற்றி பெற்றால் சம்பளத்தை கூட்டுவதும் தோல்வி அடைந்தால் தயாரிப்பாளர்களே குறைப்பதுமாக உள்ளது. கொரோனா முடிந்து தற்போது மீண்டும் படப்பிடிப்புகள் தொடங்கப்பட்டுள்ளதால் புதிய சம்பள பட்டியலை தயாரிப்பாளர்கள் தரப்பில் வெளியிட்டுள்ளனர்.

அந்த வகையில் நடிகை நயன்தாரா 4 கோடி வரை சம்பளமாக பெற்று அதிகப்படியான சம்பளம் பெறும் நடிகையாக உள்ளார். அவரை தொடர்ந்து நடிகை காஜல் 2 கோடியை சம்பளமாக பெறுகிறார்.

த்ரிஷா, தமன்னா, எமி ஜாக்சன் – 1.50 கோடி

ஸ்ருதிஹாசன் – 1 கோடி

கீர்த்தி சுரேஷ் – 80 லட்சம்

அஞ்சலி – 70 லட்சம்

ரெஜினா – 60 லட்சம்

ஸ்ரேயா – 50 லட்சம்

ஐஸ்வர்யா ராஜேஷ், நிவேதா பெத்துராஜ், ஸ்ரீ திவ்யா – 40 லட்சம்




## அழகு பிரச்சனைக்கு முற்றப்புள்ளி வைக்க வேண்டுமா?



முகத்தில் கரும்புள்ளிகள், வெண் திட்டுகள், முகப்பருக்கள் என எல்லாமே எல்லா வயதினருக்கும் வரக்கூடிய பொதுவான பிரச்சனை தான்.

இதனை போக்க பலர் பல வழிகள் கிறீம்கள், கெமிக்கல் கலந்த பொருட்களை இன்றைய காலத்தில் பயன்படுத்தி வருகின்றார்.

ஆனால் இதில் எந்த பயனுமே இல்லை. நாளடைவில் வேறு சரும பிரச்சினைகளை உண்டாக்க கூடியதாக இருக்கும்.

அந்தவகையில் எவ்வித பக்கவிளைவுகளுமின்றி எப்படி சரும பிரச்சினையிலிருந்து விடுபடலாம் என்பதை பற்றி பார்ப்போம்.

தக்காளியை இரண்டாக நறுக்கி முகத்தில் மென்மையாக தேய்த்துவிடுங்கள். முகத்தில் இருக்கும் எண்ணெய் சுரப்பை கட்டுப்படுத்துவதால் முகப்பருக்கள் தீவிரமாகாமல் இருக்கும். வாரம் இரண்டு முறை இதை செய்து வந்தால் முகத்தில் பருக்கள் வருவதை தடுக்க முடியும்.

உருளைக்கிழங்கை வட்ட வடிவில் வெட்டி அதை பன்னீரில் நனைத்து கண்களுக்கு மேல், கருவளையமும் படும்படி வைக்க வேண்டும். 15 முதல் 20 நிமிடங்கள் வரை வைத்து பிறகு கண்களை குளிர்ந்த நீரில் கழுவினால் கருவளையம் மறையும். சாதாரணமாகவே வாரம் ஒருமுறை இதை செய்துவந்தால் கருவளையம் வராமல் தடுக்கலாம். கண்கள் புத்துணர்ச்சியாகவும் இருக்கும்.

பசுந்தயிர் எடுத்து 1 தேக்கரண்டி தயிரில் சிட்டிகை மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு சேர்த்து நன்றாக கலந்து முகத்தில் தடவ வேண்டும். 20 நிமிடங்கள் கழிந்து முகத்தை கழுவினால் போதும் வெளியில் செல்பவர்கள் வாரம் மூன்று அல்லது இரண்டு முறை செய்தால் போதும். வீட்டில் இருப்பவர்கள், அதிகம் வெயில் படாமல் பணி செய்பவர்கள் வாரம் ஒருமுறை செய்தால் போதுமானது.

முட்டையை உடைத்து உள்ளிருக்கும் வெள்ளை நிற கருவை மட்டும் எடுத்து அதில் நறுமணம் தரும் லாவண்டர் ஆயில் ஒரு சொட்டு விட்டு நன்றாக கலக்கி முகத்தில் கீழிருந்து மேலாக தடவ வேண்டும். முட்டை வாடை அடிக்காதவாறு லாவண்டர் சேர்த்திருப்பதால் 20 நிமிடங்கள் வரை முகத்தில் ஊறவிட்டு பிறகு சாதாரணமான நீரில் கழுவினால் போதும். வாரம் ஒருமுறையாவது இதை செய்துவந்தால் வயதான தோற்றத்தை தள்ளிபோட முடியும்.

உதடுகளில் இருக்கும் இறந்த செல்களை நீக்க சர்க்கரை அல்லது ஓட்ஸ் பயன்படுத்தி உதட்டில் ஸ்க்ரப் செய்யலாம். தேனுடன் சர்க்கரை கலந்து பயன்படுத்தலாம். வெண்ணெய் அல்லது உதட்டுக்கு நெய் தடவுவதன் மூலமும் உதட்டை வழுவழுப்பாக வைத்திருக்க முடியும்.



இன்னொரு இதயத்தை காயப்படுத்தும்
உரிமையை
இறைவன் எல்லாருக்கும்
கொடுப்பதில்லை
ஆனால் உரிமையோடு பழகிய
சிலருக்கு மட்டும்
கொடுத்து விடுகிறான்




## முகப்பருவுக்கு இனி வேப்பிலையே போதும்!

பொதுவாக இன்றை சூழலில் மாசுபாடு, மோசமான உணவு பழக்கம், இரசாயனங்களின் பயன்பாடு போன்றவை சருமத்துக்கு தீங்கு விளைவிக்க கூடியவை.

அதில் முக்கியமானது முகப்பரு. இது வந்துவிட்டாலே போதும் முகத்தின் அழகையே பாழாக்கி விடுகின்றது.

இதனை போக்க கண்ட கண்ட கிறீம்களை தான் வாங்கி போட வேண்டும் என்ற அவசியமில்லை. இதனை எளிய இயற்கை முறையில் போக்கி கொள்ள விரும்புவர்கள் வேப்பிலை தேர்வு செய்யலாம்.

ஏனெனில் வேப்பிலை பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் பூஞ்சை காளான் பண்புகளை கொண்டிருக்கிறது. இதனால் முகப்பருவை விரட்ட இது சிறந்த மூலிகையாகும்.

அந்தவகையில் வேப்பிலையை எப்படி முகத்திற்கு பயன்படுத்தலாம் என பார்ப்போம்.

**தேவையானவை**

**வேப்பிலை விழுது – 2 டீஸ்பூன்**
**மஞ்சள் தூள்– கால் டீஸ்பூன்**
**வறட்சியான சருமம் இருப்பவர்கள் – வெண்ணெய் சிறிதளவு சேர்க்கலாம்.**

**செய்முறை**

முதலில் வேப்பிலை விழுதுடன் மஞ்சள் தூள் சேர்த்து வெண்ணெய் கலந்து பேஸ்ட் பதத்துக்கு குழைக்கவும்.தேவையெனில் சிறிதளவு பன்னீர் கலந்து குழைத்து முகம் முழுக்க தடவவும்.

இதை முகம் முழுக்க தடவி 10 முதல் 15 நிமிடங்கள் வரை உலரவிட்டு பிறகு குளிர்ந்த நீரில் முகத்தை கழுவவும். பிறகு உங்கள் சருமத்துக்கு ஏற்ற மாய்சுரைசர் பயன்படுத்தலாம்



தொகுப்பு :- சப்தஹி

# கானல் மீன்கள்

சிறுகதை

**(ராம சீதா)**

காகங்கள் கா..கா..கா... என கரைந்துகொண்டு அருகிலிருக்கும் மாமரத்தின் கிளைகளில் தஞ்சம் புகுவதும் பறப்பதுமாக இருந்தன. பருவ மங்கை போல அந்த மாமரம் பூக்களை சுமந்து புதுப்பொலிவுடன் வீசிய தென்றல் காற்றில் நாண மடைந்து தனது கிளைகளை அசைத்து, வளைத்து அபிநயம் காட்டி தென்றலை சரணடைந்து அமைதிகண்டது. மாமரத்தை நோக்கி கூடுகட்டிய மாம்பழக் குருவிகள் ஒரு மாதம் மாமரத்தை தஞ்சமடைவதும் பின்னர் வேறொரு மரத்தை நாடுவதும் மீண்டும் வேறொரு குருவி அங்கு வந்து குடியிருப்பதும் பறப்பதும் என வாழ்க்கை நடத்தின. கடந்த பல மாதங்களாக இதனை அவதானித்து வந்த பபோதாவிற்கு அந்த மாமரத்தை வெட்டி வீழ்த்த வேண்டும் போல ஒரு ஆவேசம். எதிலும் பற்றற்று எழுந்து வெளி யில் செல்வதற்கு விருப்பமின்றி சாளரத்தினூடாக ஒரு காலத்தில் பட்சிகளால் பூரிப்படைந்து முழுமையடைந்திருந்த மாம ரம் இன்று தனிமையில் எவ்வித அசைவுமின்றி நின்றிருந்ததை எண்ணிக்கொண்டு சிந்தனையில் மூழ்கினாள்.

நான் செய்வது சரியா?...! தவறா?! எனக்கு ஒன்றும் புரியவில்லை. அன்பு, காதல் - வேஷமா? எது உண்மை? எது பொய்?... எதிர்பார்ப்பு, நம்பிக்கை, ஆசை உடைபட்டு போய்விட்டதே! உயிருடன் இருந்தென்ன பயன்?..? நான் யாருக்காக எதற்காக உயிர் வாழவேண்டும்? என்னுடைய வாழ்க்கையில் திரும்பும் திசையெங்கும் அன்பின் இடைவெளியை நிரப்ப வருபவர்கள் பாதியிலே இதயத்தை உடைத்துவிட்டு சென்றுவிடுகின்றனர். எனது இந்த முடிவிலிருந்து ஏன் இவர்கள் என்னை காப்பாற்ற வேண்டும்? அப்படியே விட்டிருந்தால் போராட்டத்தின் பயணம் முடிந்திருக்கும்தானே. அவர்களுக்கும் இரண்டு நாட்களோ இல்லை ஒரு மாதத்திலோ இந்த இழப்பு சூரியனைக் கண்ட பனித்துளி போல மறைந்திருக்கும். ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மானிலத்தில் என வழமைக்கு திரும்பியிருப்பார்கள்தானே? நான் பிறந்ததே பாவம், விவரம் அறியும் வயதில் தனிமை மட்டுமே என்னை சுவீகரித்து சிறைவைத்தது!...!...! வாழ்வின் முழு அர்த்தங்களையும் தனது மூன்று பிள்ளைகளால் பெற்றுவிட்டதாக எண்ணி இன்று இருபத்து மூன்று வருடங்களாக இல்லறம் நடத்துகின்றனர் எனது பெற்றோர். எனக்கும் இல்லறம் நடத்த ஆசை. தொலைந்த அன்பின் முழு அர்த்தங்களையும் அங்கு பெறவேண்டும் என்ற ஆசை. இதயம் துறவறத்தை நாட மறுக்கின்றது. என்னால் ஆகர்ஷிக்கப்பட்ட ஆடவர்களும் என்னை துறவி என்றே தீர்மானம் எடுத்து ஒதுங்கிகொள்கின்றனர். இரண்டு ஆண்களிடம் என் உள்ளத்தை திறந்து நானும் ஒரு பெண். என் இதயத்திலும் காதல் உண்டு. புரியவைத்து தோற்றுபோனேன்?...? காதல் எங்கள்சமூகத்தில்மலிந்துகிடக்கும் பண்பாடு. சிங்கள சமூகம் என்றால் இப்படித்தான் ஆண் - பெண் தெருவெங்கும் தமது போக்கில் உணர்ச்சிக்கு அடிமையாகி விடுகின்றனர் என்ற கணிப்பு பிற சமூகங்களின் கண்ணோட்டத்தில் இருக்கின்றது. நானும் சிங்கள சமூகத்தில் பிறந்தவள் தான். உணர்ச்சி அல்ல என் தேவை. அன்பாக கடைசிவரையும் சேர்ந்தே பயணிக்க ஒரு ஆண்.

படுக்கையில் தலைசாய்த்து கண்ணீர் துளிகளில் முகம் கழுவி, செந்தாமரை இதழ் வாடி, கயல் மீன் போன்ற கண்கள் மை தீட்டாது பொலிவிழந்து, தரையில் கிடக்கும் மீன்கள் தண்ணீரின் குளிர்ச்சியை ஆராதிக்க விரக தாபம் கொண்டிருப்பது போல துடி துடித்து கண்கள் மூடி பபோதா வீரமாலி சர்வ அங்கமும் அடங்கிபோய் கிடந்தாள். அழகிற்கு முழு இலக்கணத்தையும் அவள் அங்கங்கள் வடிவமைக்காவிடினும் பார்ப்பவர்களை ஓரளவேனும் திரும்பி பார்க்கவைக்கும் ஓர் ஈர்ப்பு இருக்கத்தான் செய்தது. "இந்தா சாப்பாடு இங்க இருக்கு. தண்ணியும் வைச்சிருக்கேன். இஷ்டம்னா சாப்பிடு" என்று கூறுவது போல அவளது அம்மா மெனிக்கே சாப்பாட்டையும் தண்ணீரையும் அருகில் கிடந்த மேசையில் வைத்துவிட்டு திரும்பினாள். தந்தை புஞ்சிபண்டா வெளி விறாந்தையில் போடப்பட்ட சாய்நாற்காலியில் சாய்ந்திருந்து ஆழ்ந்த சிந்தனையில் வானத்தை வெறித்து பார்த்து கொண்டிருந்தார். இத்தனை காலமும் அவரது வளவிற்குள் எங்கும் வியாபித்திருந்த தென்னை மரங்கள், வயல் வெளிகள் பசுமை இழந்து கருகிபோனதை போன்ற ஒரு உணர்வு. இதயத்தின் கன தியை இறக்க முடியாமல் அவருக்கு நெஞ்சு படபடத்தது. பெற்றோரின் நியாயமான கோபத்தையும், வருத்தத்தையும் உணர முடியாமல் காதல் வட்டத்திற்குள் சிறைக்கைதியாகி பபோதா இருந்தமை அவளது குடும்பத்தினருக்குபெரும்வேதனை யாக இருந்தது. இனி தனக்கு வாழ்வே இல்லையென வெறுத்து சென்றவாரம் இருபது தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு, மீண்டு(ம்) வீட்டிற்கு வந்து தனி யறையில் தன்னை சிறை வைத்து மௌன பாஷையில் பபோதா குடியிருந்தாள்.

பபோதா, அவள் ஒரு பல்கலைக் கழக மாணவி. அவளது பெற்றோர் விவசாயத்தை ஜீவனோபாயமாக கொண்டிருந்தனர். பொருளாதார வசதி ஓரளவிற்கே அவர்களின் குடும்பத்தை தக்கவைத்திருந்தது. பெண்ணிற்குரிய இலட்சணங்கள் தனக்கிருந்தும் பெண்மைக்கு மென்மையே இலக்கணம் என எண்ணிவிடாது ஒரு ஆண் மகனை போல பகுதிநேர வேலைகளை செய்து தனது படிப்பிற்கான முழுசெலவையும் பார்த்து கொண்டாள். தனிமையில் எல்லா இடங்களுக்கும்சென்றுபிரத்தியேக வகுப்பை எடுத்தல், வீட்டில் சமைத்தல், இரு தம்பிமார்களுக்கும் கற்றலில் உதவிசெய்தல் என ஒரு வீரமங்கையாக வலம் வந்தாள். ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்கசென்ற இவளுக்கு இளமை உணர்வுகள் துளிர்விட வசந்தகால அரும்பாக மலர்ந்து காதல் மலராக மணம் பரப்பி பசுமையாக படர்ந்தாள். பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் மரம், செடி, கொடிகள், அமரும் இருக்கைகள் - காதல் தோட்டமாகின. கையடக்கத் தொலைபேசி உயிரின் அசைவு களை அறிவிக்கும் இதயமாகியது. அன்றொரு மாலைபொழுது விஞ்ஞானபீடத்தின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த படிக் கட்டுக்களில் அமர்ந்து தனது காதலன் விமலுடன் தன்னை மறந்த நிலையில் கைகோர்த்து பபோதா உரையாடிக் கொண்டிருந்தாள். எங்கு திரும்பினாலும் சந்து பொந்துகளில் இவர்களைப் போல பல்கலைக்கழக காதலர் கள் காதல் மழையில்



நனைந்து கொண்டிருந்தனர். விஞ்ஞானபீடம் மட்டுமன்றி அப்பல் கலைக்கழகத்தின் பல பகுதிகள் புணர்தல் ஒழுக்கத்திற்கு ஏற்றாற் போல வடிவமைக்கப்பட்டிருந்தது. இரவு பத்து மணிவரை மாணவர்களின் அட்டகாசம், ஒன்றுகூடல் அனைத்தும் அரங்கேறி முடியும். விஞ்ஞானபீடத்தின் முன்னால் அமைக்கப்பட்ட படிக்கட்டுக்களை யொட்டிய வளாகம் மட்டுமே பசுமைபோர்த்தி, மரங்கள் நிறைந்த மறைவை வழங்கி, இயற்கை ரம்மியத்தை அளித்ததால் அதி கமான மாணவர்கள் மாலைவேளை யில் கூடு தேடும் பறவைகள் போல அந்த பகுதியை தஞ்சமடைவர். சிற்றுண்டிச்சாலையும் அருகில் இருந்தமையால் அது இன்னும் வசதியாக சில மாணவர்களுக்கு இருந்தது. விரிவுரைகள் முடிந்து சில மாணவர்கள் விடுதிக்கும், சில மாணவர்கள் சிற்றுண்டிச்சாலைக்கும் போவதும் வருவதுமாக இருக்கின்றனர். விரிவுரையாளர்களும் தங்களின் கடமைகளை முடித்து வீட்டிற்கு பயணமானர். காதல் ஜோடிகள் மட்டும் இரவை தேன்நிலவாக்குவதற்காக காத் திருந்தனர். இது சாதாரணமாக பல்கலைக்கழக வளாகத்திற்குள் நடக்கும் நாடகங்கள்தானே! இவற்றை பொருட்படுத்துவது யார்? என்பது போல பலர் கண்டும் காணாதும் நடந்தனர். தூரத்தே தெரிந்த தங்க வர்ணத்தினாலான கொன்றை மலர்கள் மங்கையரின் கூந்தலை அலங்கரிக்க கோர்வையாக்கப்பட்டு காத்திருந்தன. அவை காற்றின் பிடிக்கு ஈடுகொடுக்க முடியாமல் உதிர்ந்து நில மகளுக்கு போர்வை யாகின. அருகிலிருந்த இரண்டு எந்தூரியம் பூக்களை பட்டாம்பூச்சி மாறி மாறி முத்தமிட எந்தூரியம் பூக்கள் ஊடலால் ஒரு நொடி அசைந்து தலைகவிழ்கின்றன. அதைபார்த்தபபோதாஏதோநாணம் மேலிட தன் காதலனை அசட்டு சிரிப்புடன் தள்ளிவிடுகின்றாள், கடைக்கண்ணால் பார்க்கின்றாள். அந்த பல்கலைக்கழக வளாகத்தில் தென்றல் வந்து தீண்டும்போது தடைபோடாது சில பூக்கள் இசைந்துவிடுகின்றன. இசைந்த பல பூக்கள் மலராது உதிர்ந்தும் விடுகின்றன.

மாதங்கள் பல உருண்டோடிய போது வீட்டாருக்கு பபோதாவின் நடவடிக்கைகள் தெரியவரவே அவளின் காதலன் விமலவை வீட்டிற்கு அழைத்து பெற்றோர் பேசி னர். அவனது நாகரிகமற்ற பேச்சு, தோற்றம் அவர்களுக்கு பிடிக்காமல் போகவே பபோதாவை அவளது பெற்றோர் இந்த உறவைவிட்டுவிடு என்று கூறினர், மறுத்துவிட்டாள். அவளுக்கு காதலே முக்கியம். காலங்கள் கடந்தபோது கால தேவன் விமலவின் குணத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல காட்டினான். பபோதா வேலை செய்யும் இடங்களில் சென்று "அவள் கூடாதவள் என்றும் அவளை வேலைக்கமர்த்த வேண்டாம்" என்றும் பல கதை களை இட்டுகட்டிக்கூறி அவளது எதிர்ப்பை சம்பாதித்தான்.

தொடரும்...

# தொல்லியல் வடிவத்தில் அடுத்த கட்டப் போர்

**– என்.சரவணன்**

**கடந்த வாரத் தொடர்ச்சி...**

ஈழத் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக் கனலை அன்றும் இன்றும் அணையாது மூட்டிவிட்ட பெருமை திருமலைக்குத்தான் சேரும். அன்று 1956ஆம் ஆண்டு இந்நாட்டுத்தமிழ் மக்கள் பாதயாத்திரை நடத்தி வெள்ளம்போல் கூடி விடுதலைத் தீர்மானத்தை நிறைவேற்றியதும் திருமலையில் தான். அடுத்து 1957ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி கொடி காப்பதற்காக குண்டடிபட்டு இன்னுயிரைப் பலிகொடுத்து ஈழத்தமிழினத்தின் விடுதலைக் காவியத்தை இரத்தத்தினால் எழுதினான் திருமலைத் தியாகி நடராசன்."

### யார் இந்த எல்லாவல மெத்தானந்த தேரர்

திருக்கோனேஸ்வரர் கோவில் அங்கு ஏற்கனவே இருந்த கோகன்ன என்கிற பௌத்த விகாரையை இடித்துத் தான் கட்டப்பட்டது என்றும் கோணேஸ்வரம் என்பது கோகன்ன விகாரையே என்றும் எல்லாவல மெத்தானந்த தேரர் யூலை மாத முற்பகுதியில் "தமிழன்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் வெளியிட்டிருந்த கருத்து தமிழ்ச் சூழலில் சலசலப்புக்குள்ளானது. அதேவேளை அவர் இக்கருத்தை புதிதாக சொல்லவில்லை சிங்கள சூழலில் பல ஆண்டுகளாக சொல்லிவந்த கதை தான் அது. சிங்களவர்களின் புனித வரலாற்று நூலான மகாவம்சத்தில் மகாசேனன் சைவக் கோவில்களை அழித்து பௌத்த விகாரைகளைக் கட்டினான் என்கிறது. அப்படி கட்டப்பட்டதில் கோகன்ன விகாரை, எறகவில்ல விகாரை, கலந்த விகாரை என்பனவற்றை குறிப்பிடுகிறது.

தொல்லியலின் பெயரால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் பின்னணியில் எல்லாவல மெத்தானந்த தேரரின் நீண்ட கால பங்களிப்பு உண்டு. இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்துக்கு முக்கியமான காரணகர்த்தா அவர். கடந்த 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர் 64 ஆண்டுகளாக மேற்கொண்டு வந்த தொல்பொருள் ஆய்வுகள், பணிகள் என்பவற்றை காட்சிப்படுத்தும் கண்காட்சியொன்று எஹெலிய கொட – நாபாவல சுமங்கலாராமய விகாரையில் நடத்தப்பட்டது. அவர் கண்டெடுத்த கல்வெட்டுகள், அவரின் நூல்கள், கட்டுரைகள் என்பன மட்டுமன்றி யுத்த காலத்தில் அவர் இராணுவத்துடன் சேர்ந்து ஆற்றிய பணிகள் பற்றிய புகைப்படங்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதுவரை இவர்தொல்லியல்,வரலாறுசார்ந்து 50க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். இதுவரை எவரும் கண்டுபிடிக்காத 500க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களைக் கண்டெடுத்தவர் என்கின்றனர்.

"தொல்லியல் சக்கரவர்த்தி எல்லாவல" என்று அனைவராலும் அழைக்கப்படுபவர். தொல்லியல் திணைக்களம் நூற்றாண்டு விழாவை அரசு கொண்டாடியபோது அவருக்கு தொல்லியல் சக்கரவர்த்தி என்கிற பட்டம் சூட்டப்பட்டது. இலங்கையில் அப்பட்டம் சூட்டப்பட்ட ஒரே ஒருவர் அவர் தான். அவர் இன்றைய இனவாத சக்திகளின் முக்கிய ஆயுதம். குறிப்பாக இது சிங்கள நாடு, தமிழர்கள் அன்னியர்கள், தமிழர்களுக்குஎன்றுஒருதாயகமும் கிடையாது, அங்கெல்லாம் சிங்கள பௌத்த தொன்மைகளே உள்ளன என்று தொல்பொருள் ஆதாரங்களுடன் புனையும் பணியை நீண்ட காலமாக ஆற்றி வருகிறார்.

மகாவம்சத்தை இன்றும் தொடர்ந்து இயற்றுவதற்காக அரசால் நிறுவப்பட்டுள்ள சபையில் பல வருடங்கள் உறுப்பினராக கடமையாற்றியிருக்கிறார். அரச தொல்லியல் ஆலோசனைச் சபையின் உறுப்பினரும் கூட. மெத்தானந்த தேரர் 2003ஆம் ஆண்டு வெளியிட்ட "வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள பௌத்த பாரம்பரியம்" என்கிற நூல் சிங்கள பௌத்தர்களை இனவாத ரீதியில் தூண்டிவிட்ட முக்கியமானதொரு நூல். 479 பக்கங்களைக் கொண்ட இந்த நூலுக்கு 2003ஆம் ஆண்டுக்கான இலங்கை அரசின் சாகித்திய விருதும் கிடைத்தது. அதன் பின்னர் பல மறு பதிப்புகளையும் கண்டது இந்த நூல். இந்த நூலில் வடக்கு கிழக்கு பகுதிகளில் பல பிரதேசங்களை சுட்டிக்காட்டி அங்கெல்லாம் தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்பட்டதாகவும் மேலும் அவை விரிவாக தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். இந்த நூலை விரிவாக்கித் தான் பலரும் சிங்கள பௌத்த வரலாற்றுப் புனைவுகளை பரப்பி வருகின்றனர். வடகிழக்கை உரிமை கோரி சிங்களவர்கள் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு உந்திய முக்கிய நூல் இது.

ஒரு முறை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக இருந்த அன்ரன் பாலசிங்கம் இந்த நூலின் ஆங்கிலப் பிரதியை வாசித்துவிட்டு அது குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவித்ததாகவும் அதனால் விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் மெத்தானந்த தேரரின் பெயரும் இருந்ததாகவும் எல்லாவல தேரர் பற்றி கடந்த ஜனவரியில் வெளிவந்த சிங்களக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதே கட்டுரையில் இன்னொரு குறிப்பும் இருந்தது. ஒரு தடவை கிழக்கில் கொஸ்கொல்ல என்கிற பிரதேசத்தில் தொல்லியல் ஆய்வுகளை தன்னந்தனியாக சென்று தேடிவிட்டு மீண்டும் திரும்ப முடியாமல் வழிதவறி திரிந்தாராம்.

**தொடரும்...**

# கொரோனா

**(எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேசன்)**

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

மனிசிண்ட சொந்தக்காரங்களெல்லாம் கொழும்பில இருக்காங்க. மனிசிக்குப் பாக்கியம், மூத்த மகனுக்கு சாத். இளைய மகளுக்கு கமலி"

"ஐயா முதலில இந்த குளிசையைக் குடியுங்க"

"வேண்டாம் தங்கச்சி என்னை டிக்கட் வெட்டி விடுங்க என்ர புள்ளக் குட்டி மனிசியைத் தேடப் போறன்"

"நீங்க தெம்பாயிருந்தால்தான் அவுங்கள பார்க்கலாம். மருந்த குடியுங்கள், ஒரு கிழமையால உங்கள விடுகிறம்"

"நீ சொல்லுறதும் சரிதான் புள்ள சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம். மருந்த கொடுபுள்ள குடிப்பம்" என்றவாறு தாதியின் துணையுடன் மெதுவாக எழுந்து தாதியர் பொத்தல் மூலம் அவரின் வாயில் தண்ணீரைப் பருக்கவும் கனகர் வலக்கையில் வாங்கிய குளிசைகளை வாய்க்குள் மெல்லமாக போட்டார்.

"சத்தம்போடாமபடுத்திருங்கஐயா, எல்லாம் சுகம் வரும். கவலைப்பட வேண்டாம். எல்லாம் மனிதனுக்கே வருது என்ன செய்றது"

"எப்படி தங்கச்சி கவலைப்படாம இருக்கிறது?. ஒரு நாள் கூட என்ர மனிசி பிள்ளைகள் என்னை விட்டுட்டு இருக்காதுகள்"

"இந்த கொஸ்பிட்டல்ல இருக்கிற அரைவாசி பேர் இப்படிதான் ஏங்குறார்கள். வோட்டில இருக்கிற நீங்க பறவாயில்லை. ஆயிரக்கணக்கான எங்கள் உறவுகள் பிணவறையில கட்டிலும் இல்லாமல் ஒருவர் மேல் ஒருவர் ஆண், பெண், சிறுவர், முதியோர் வேறுபாடுகள் இல்லாமல் உறங்குவது போல, எதிர்கால கனவுகளுடன் கிடந்தார்கள். அதைப் பார்க்கும் போது இந்த உலகத்தில மனித பிறப்பே வேண்டாம் என்பது போல, இருக்குது"

"ஐயோ! அதில என்ர மனிஸி, பிள்ளைகள் இருக்கோ தெரியாது"

"உங்கட நல்ல மனசுக்கு அப்படி ஒன்றும் இருக்காது"

"இப்ப நல்லவனுக்குக் காலம் இல்ல"

"நான் உங்களுக்கிட்ட கதைக்கிற மாதிரி இஞ்ச இருக்கிற இருநூறு காயக்காரங்களிடம் கதைத்தனான். அவுங்களுக்கும் உங்கள மாதிரி தான். பலருக்குப் பல பிரச்சினைகள் இருக்கு. அது சரி பரவாயில்லை. எத்தனையோ காயப்பட்டவங்கள் இன்னும் மயக்கம் தெளியாம இருக்காங்க"

"இந்த உலகத்தில மனிதன் பிறப்பது ஒரு தடவைதான். நாங்கள் எவ்வளவோ காசு பணம் சொத்து சுகம் எல்லாம் இந்த உயிர் போனா பிறகு அதால ஒரு பயனும் இல்ல. இதை நான் நாலு பேருக்குச் சென்னா இந்த உலகம் என்னை முட்டாள் என்று அழைக்கும். எங்கட சனத்துக்கு இன்னும் அறிவு வரவில்லை. கிளாளிக்கடலிலையும் அக்கரையிலும் இக்கரையிலும் எத்தனை ஆயிரம் உயிரும் உடைமைகளும் அழிஞ்சிப் போச்சி."

"ஐயா, ஏன் இப்படி வெறுப்பா எங்கட சனத்தைப்பற்றி கதைக்கிறீங்க?"

"அங்க பின்னுக்குப் பாருங்க. ஒரு கட்டிலுக்கு மூன்று பேரு சண்டைப் பிடிக்கிறாங்க"

"அது எங்கட மக்களுக்கு இரத்தத்தில ஊறிப்போச்சி"

"ஓம் தங்கச்சி பகிர்ந்துண்ணல் தமிழர் பண்பாடுணு இலக்கியம் எல்லாம் சொல்லுது. இவ்வளவு மக்களும் கிளாலி கடலால வரேக்க எத்தனை சின்ன சிறுசுகள் பசியில பரிதவித்தன. சாப்பாடு, பிஸ்கட் வைச்சிருந்த சில பெரிய ஆக்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு மட்டும் ஒழிச்சு ஒழிச்சு கொடுத்தாங்க. இதுகள் தங்களுக்கு ஏதும் சாப்பிட தரமாட்டாங்களா என்று பாத்துப் பாத்து தூங்கிப் போச்சிகள்."

"என்னத்த செய்றது இந்த மக்களுக்கு அறிவே வரமாட்டங்கிது. பசுமரத் தாணிபோல சின்னஞ்சிறுசுகளின் உள்ளத்திலையும் சுயநலத்தையும் பகிர்ந்துண்ணாத பண்பையும் ஏற்றுறாங்க"

"நெருப்பில் விழுந்த நண்டு தணலைக் கவ்வுவது போல எங்கட மக்கள் சுயநலமா சிந்திப்பதால், பரம்பரையாக துன்பப்பட்டுக்கொண்டே இருக்கினம். எங்கட சமூகத்தில வேலியே பயிரை மேய்ந்தாற்போல சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை. இவற்றை நினைக்கேக்கத்தான் என்ர பிள்ளைகளையும் மனிசியையும் நினைத்தா பயமா இருக்கு. எத்தனை சிறுவர்களும்பெண்களும் துன்பப்படுகிறார்களோ!"

"ஐயா, நீங்க கணக்க யோசிக்கிறீங்க போல"

"மகனுக்கு இப்பதான் பதினாலு வயசாகின்றது. இல்ல தங்கச்சிஎன்ர மகனோட உனக்கு ஆறு வயசுதான் கூடயிருக்கும் இல்லையா?"

"எப்படி ஐயா கணக்குத் தப்பாம சொல்லுறீங்க."

"இதெல்லாம்அனுபவம்தான், நான் என்ன சொல்ல வாறன் என்றால்? நீயும் எனக்கு மகள் மாதிரிதான். ஒரு அப்பாவ பாக்கிற மாதிரி நீ என்னை பராமரிக்கின்றாய். சிரமத்தையும் பாராமல் எல்லோருடனும் அன்பாகவும் ஆதரவாகவும் கதைக்கிறாய். இதே மாதிரி எல்லோரும் இருப்பாங்களா.? என்ர மகன் சிறியவனாக இருந்தாலும் காரியகாரன்"

"அய்யா எதை வச்சி அப்படி சொல்லுறீங்க"

"எங்கட ஊரில எங்கயோ ஒரு இடத்தில் குண்டு வெடிச்சு பல ஆமிக்காரன் செத்துட்டாங்கணு மூன்று நாள் ஊரடங்குச் சட்டம் போட்டாங்க. அன்று முதல் நாள் தான் இவன்ர அம்மாவிற்குக் காச்சல் வந்து எங்கயும் கொண்டு போக முடியாமல், காச்சல் கூடி மூன்றாம் நாள் ஒரு கை இழுத்த பிறகு தான், ஊரடங்குச் சட்டம் முடிந்து நான்காம் நாலுதான் அவளைஆஸ்பத்திரியில் அனுமதித்தோம். கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆஸ்பத்திரியிலிருந்தும் அவளுக்கு இழுத்த கை இழுத்ததுதான்.

**தொடரும்...**




## அனைத்து பயனர்களுக்கும் வட்ஸ் அப் அறிமுகம் செய்யும் புத்தம் புதிய வசதி

முன்னணி குறுஞ்செய்தி செயலியான வட்ஸ் அப்பில் ஒன்லைன் பணப்பரிமாற்ற சேவை அறிமுகம் செய்யப்படவுள்ளமை தெரிந்ததே. எனினும் இச் சேவை முதலில் இந்தியாவில் மாத்திரமே அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இப்படியான நிலையில் உலகெங்கிலும் உள்ள அனைத்து பயனர்களுக்கும் சொப்பிங் பொத்தான் ஒன்றினை வட்ஸ் அப் அறிமுகம் செய்கின்றது. இதன் மூலம் ஒன்லைனில் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பொத்தான் ஆனது அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கு உதவும் பொத்தான் இருக்கும் பகுதியில் தரப்படவுள்ளது. மேலும் இவ் வசதியினை அன்ரோயிட் மற்றும் IOS சாதனங்கள் இரண்டிலும் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



## இன்ஷ்டகிராமில் தானாகவே அழியக்கூடிய புகைப்படங்கள் , வீடியோக்களை அனுப்புவது எப்படி ?

மொபைல் அப்பிகேஷன்களில் பகிரப்படும் குறுந்தகவல் தானாகவே அழியக்கூடிய வசதிகள் தற்போது அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சில தினங்களுக்கு முன்னர் வட்ஸ் அப்பில் அறிமுகம் செய்யப்பட்டது. அதேபோன்று இன்ஷ்டகிராமில் ஏற்கனவே இவ்வசதி அறிமுகம் செய்யப்பட்டது.

இவ்வசதியினை இன்ஷ்டகிராமில் எவ்வாறு பயன்படுத்தலாம் என பார்க்கலாம். முதலில் இன்ஷ்டகிராம் அப்பிகேஷனை திறந்து Direct Message வசதிக்கு செல்லவும். அங்கு படம் அல்லது வீடியோவை அனுப்ப வேண்டியவரின் கணக்கினை அல்லது குழுவினை தெரிவுச் செய்யவும். அதன் பின்னர் கமரா ஐகானை தெரிவுச் செய்து புதிய படம் அல்லது வீடியோ ஒன்றினை பதிவுச் செய்து கொள்ளவும். தொடர்ந்து View Once , Allow Reply Keep in chat எனும் வசதிகளில் View Once என்பதை தெரிவுச் செய்ய வேண்டும். அதன் பின்னர் send என்பதனை கிளிக் செய்து குறித்த கோப்பினை அனுப்பவும். இவ்வாறு அனுப்பட்ட கோப்பானது ஒரு முறை பார்வையிட்ட பின்னர் தானாகவே அழிந்து விடும்.



## கரடிகளிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்கும் ஓநாய் ரோபோக்கள்!

ஜப்பானில் தகிகாவா பகுதியில் (Takikawa) கரடிகளிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்காக ரோபோ ஓநாய்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இவ் ரோபோ ஓநாய் உண்மையான ஓநாயை போல முடியையும், ஒளிரும் சிவப்பு கண்களையும் கொண்டுள்ளது.கரடிகள் பயிர்களை சேதப்படுத்த வரும் போது இந்த ரோபோ ஓநாய்கள் சத்தமாக ஊளையிடுகின்றன. இதனால் சேதப்படுத்த வரும் கரடிகள் உடனடியாக அந்த இடத்தைவிட்டு செல்வதாக அந்நாட்டு விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



## கொரோனா வைரஸைக் கொல்லும் கருவி அமெரிக்காவில் கண்டுபிடிப்பு?



அமெரிக்காவில் கொரோனா வைரஸைக் கொல்வதற்கான கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

டெக்ஸாஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ள இக் கருவிக்கு நானோ வேவ் டிவைஸ் (Nanowave Device) என்று பெயரிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அறையில் வைக்கப்படும் இக் கருவியானது காற்றை உள்ளிழுத்து புற ஊதாக் கதிர்களால் சுத்திகரித்து மீண்டும் காற்றினை வெளியிடுகிறது.

இதனால் காற்றில் பரவும் அனைத்து வகையான வைரஸ்களும் உள்ளிழுக்கப்பட்டு கொல்லப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் செக்கனுக்கு 2000 கிருமிகளைக் கொல்வதாக தெரிவித்துள்ள அவர்கள் இதன் மூலம் 99.99 % காற்று சுத்திகரிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.



**“எதற்கும் தயாராக இருக்க வேண்டும், ஒரு நாள் நமக்கான வாய்ப்பு வரும்!”**

ஆபிரகாம் லிங்கன்




## பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவருக்கு கொரோனா

பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் மோமினுல் ஹக்கிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவரான மோமினுல் ஹக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில், அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டியில் விளையாடும் வாய்ப்பை அவர் இழந்துள்ளார்



கொரோனா தொற்று காரணமாக இம்மாத கடைசியில் நடைபெறவுள்ள டி20 கோப்பை போட்டியிலும் மோமினுல் ஹக் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் வீரர்கள் மஷ்ரஃபே மோர்ட்டஸா, அபு ஜாவேத், சயீஃப் ஹசன் ஆகியோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு தற்போது குணமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது

## 2021 ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் 2021ஆம் ஆண்டு ஜப்பானில் நிச்சயம் நடைபெறும் என பன்னாட்டு ஒலிம்பிக் ஆணையம் தெரிவித்துள்ளது . தீவிரமடைந்து வரும் கொரோனா வைரஸின் காரணமாக உலகளாவிய ரீதியில் பல முக்கிய நிகழ்வுகள் ஒத்திவைக்கப்பட்டது. அந்த வகையில் இவ்வாண்டு ஜப்பானின் டோக்கியோவில் நடைபெறுவதாக இருந்த ஒலிம்பிக் போட்டிகளும் ஒரு வருடம் ஒத்திவைக்கப்படுவதாக சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய ஜப்பான் பிரதமர் யோஷிஹைட் சுகா 2021இல் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் ஜப்பான் உறுதியாக உள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஜப்பானில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாளர்களுடன் ஒலிம்பிக் போட்டிகள் முன்னெடுக்கப்படும் என ஒலிம்பிக் குழுவின் தலைவர் தாமஸ் பாக் செய்தி வெளியிட்டுள்ளார் . இது ஒலிம்பிக் ஆர்வலர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது .




## ஐபிஎல் கிண்ணத்தை வென்ற ஐந்து முறையும் மும்பை அணியில் இடம் பிடித்தவர்கள் யார் தெரியுமா?

நடப்பாண்டிற்கான ஐபிஎல் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் அன்றைய தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் டெல்லி கெபிடல்ஸ் (Delhi Capitals) அணியை வீழ்த்தி 5ஆவது முறையாக கிண்ணத்தை வென்றது மும்பை இந்தியன்ஸ் (Mumbai Indians) அணி.

இந் நிலையில் ரோகித் சர்மா, பொல்லார்ட் ஆகிய இருவர் மாத்திரமே மும்பை இந்தியன்ஸ் அணி கிண்ணத்தை வென்ற ஐந்து முறையும் அந்த அணிக்காக விளையாடியவர்கள் என்பது குறிப்படத்தகக்து. மும்பை அணியானது கடந்த வருடமும் கிண்ணத்தை வென்றிருந்ததால் அடுத்தடுத்து கிண்ணத்தை வென்ற 2ஆவது அணி என்ற பெருமையை பெற்றது. இதற்கு முன் சென்னை சூப்பர் கிங்ஸ் அடுத்தடுத்து வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## அடுத்த ஆண்டு ஐ.பி.எல் தொடரில் அறிமுகமாகுமா புதிய அணி?

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல் போட்டியில் 9 ஆவதாக ஓர் புதிய அணியை இணைக்க இந்திய கிரிக்கெட் சபை ஆலோசித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல் போட்டிகள் ஏப்ரல்-மே அளவில் நடைபெறுமெனவும் அதற்கான வீரர்களை ஏலத்தில் எடுக்கும் நிகழ்வு அடுத்தாண்டு ஆரம்பத்தில் நடைபெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, குஜராத்திலிருந்து புதிதாக ஒரு அணியை இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அதானி குழுமம் குறித்த வாய்ப்பைப் பெற வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளதோடு அணியின் பெயரில் அகமதாபாத் இடம் பெறும் எனவும் தகவல் கசிந்துள்ளது.




## ஐபிஎல்2020: இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது மும்பை அணி!

அடிலெய்டில் (Adelaide) நடைபெறவுள்ள இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான பகலிரவு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை காண ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக அவுஸ்திரேலியாவில் கிரிக்கெட் போட்டிகளை காண ரசிகர்களுக்கு அனுமதி இரத்து செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடைபெறவுள்ளதோடு இப் போட்டியைக் காண ரசிகர்களுக்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. 55 ஆயிரம் இருக்கைகள் கொண்ட அடிலெய்டு மைதானத்தில் 27 ஆயிரம் ரசிகர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகக்து.






## லிபியா அருகே 121 புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற படகு விபத்து

லிபியா அருகே 121 புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் சுமார் 74 பேர் வரை உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந் நிலையில் கடற்படையினர் மற்றும் கடலோர காவல்படையினர் இரவு பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையில் புதிதாக பிறந்த குழந்தை உட்பட இதுவரை 47 பேரை உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் ஹெலிகொப்டர்கள் மூலமாக கரைக்கு கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தொடர்ந்து இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஒக்டோபர் மாதம் முதல் மெடிட்டேரியன் கடல் பகுதியில் இது போன்ற எட்டு படகு விபத்துகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நெதர்லாந்தில் சவுதிதூதரகத்தின் மீது துப்பாக்கி பிரயோகம்

நெதர்லாந்தில் உள்ள சவுதி தூதரகத்தின் மீது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.ஹேக்கில் உள்ள தூதரகத்தின் மீதே துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது. அதிகாலைக்கு முன்னதாக இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் எவரும் காயமடையவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இருபதுக்கு மேற்பட்ட தடவை துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளார். விசாரணைகள் இடம்பெறுகின்றன காரணங்கள் இதுவரை தெரியவில்லை என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். நெதர்லாந்திற்கான சவுதிஅரேபிய தூதரகம் இந்த தாக்குதலை கோழைத்தனமானது என கண்டிதுள்ளதுடன் தனது பிரஜைகளை எச்சரிக்கையுடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளமைக்கான தடயங்களை தொலைக்காட்சி காண்பித்துள்ளது. சவுதிஅரேபியாவின் ஜெத்தாவில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களின் அதிகாரிகள் கலந்துகொண்ட நிகழ்வில் சிறிய குண்டுவெடிப்பொன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட உக்ரேன் ஜனாதிபதி

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி (Volodymyr Zelenskiy ) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அண்மையில் வொலோடிமிர் செலென்ஸ்கி . அந் நாட்டு நிதியமைச்சர். பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஜனாதிபதியின் உதவியாளர் ஆகியோருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து தன்னை தனிமைப்படுத்திக் கொண்ட செலென்ஸ்கி வீட்டில் இருந்தவாறு கடமையாற்றி வந்தார்.

இந் நிலையில், தன்னால் மற்றவர்களுக்கு கொரோனாத் தொற்று பரவுவதை தடுக்க செலென்ஸ்கி வைத்தியசாலைக்கு மாறியுள்ளதாகவும் அவரது உடல்நிலை தற்போது சீராக உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




## உலகின் மிக விலையுயர்ந்த உணவு எது தெரியுமா?

உலகின் மிக விலை உயர்ந்த உணவுப் பொருட்களில் மீன்களில் இருந்து கிடைக்கும் கேவியரும் ஒன்று. கேவியர் (Caviar) என்பது ஸ்டர்ஜன் குடும்பத்தை சேர்ந்த மீன்களின் சினை அல்லது முட்டை என கூறப்படுகிறது. கஸ்பியன் மற்றும் கருங்கடலில் இவ் வகை மீன்கள் அதிகம் காணப்படுகிறது. இதன் விலை உங்களை வாயடைக்க வைக்கும். ஏனென்றால் இதனை வாங்குவதற்கு நீங்கள் 34,500 டொலர்கள் (1 கிலோகிராம் இலங்கை மதிப்பில் சுமார் 6,370,131 ரூபா) வரை செலவழிக்க வேண்டும். மற்ற மீன்களிலும் இது போன்ற முட்டை காணப்படும். ஆனால் அது சாப்பிடுவதற்கு உகந்தது கிடையாது.ஆனால் கேவியர் உப்புத்தன்மையுடன் சாப்பிடுவதற்கு சுவையாக இருக்கும் என கூறுகின்றனர். இது பார்ப்பதற்கு உருண்டையாகவும், பளபளப்பாகவும் இருக்கும். சிறிய முட்டை போல் இருக்கும் இதனை சாப்பிடுவதற்கு உலகம் முழுவதும் ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள்.

சீன பிராண்டான கலுகா குயின்தான் உலகளவில் அதிகம் பயன்படுத்தப்படும் கேவியர். உலகின் மொத்த விற்பனையில் 35% இங்கு தான் நடைபெறுகிறது. இந்த மீன் இனம் அழிவை சந்தித்து வருவதால், இதனை தனியாக வளர்த்து அதில் இருந்து கேவியரை எடுத்து விற்பனை செய்கின்றனர். அங்கு தற்போது 3,20,000 ஸ்டர்ஜென் வளர்க்கப்படுகிறது. இவை ஒட்டுமொத்தமாக 3000 டன் எடை இருக்கும் என தெரிவித்துள்ளனர். 13 அடி நீளமும்,294.835 கிலோகிராம் எடையும் கொண்ட இந்த மீனை வளர்க்கும் போது ஆகும் செலவை விட, விற்பனை செய்யும் போது ஆறு மடங்கு கூடுதல் வருவாய் கிடைக்கிறது.

மீனில் இருந்து பிரித்தெடுக்கும் இந்த கேவியரை கழுவி சுத்தம் செய்த பிறகு உலர வைக்கின்றனர். உப்பு பயன்படுத்தி இதனை தயார் செய்து ஒரு போத்தலில் அடைத்து விற்பனை செய்கின்றனர். குளு குளு ஐஸ் கட்டிகளில் வைத்து இதனை சாப்பிடுகின்றனர். உள்ளங்கையின் பின்புறத்தில் வைத்து அதனை சாப்பிடும் முறையையே பலரும் பின்பற்றுகின்றனர். இதனை ஒருமுறை ருசிபார்த்து விட்டால் அதன்பிறகு இந்த சுவையை உங்களால் மறக்க முடியாத அளவுக்கு இருக்குமாம்.







## பஹ்ரைனின் புதிய பிரதமராக ஹஷேக் சல்மான் பின் ஹமாத் அல் கலிபாஹ நியமனம்!

உலகின் நீண்ட கால பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற பஹ்ரைன் பிரதமர் காலிபா பின் சல்மான் அல் காலிபா (Khalifa bin Salman Al Khalifa) தனது 84 வது வயதில் அமெரிக்காவில் காலமானார்.



இந் நிலையில் பஹ்ரைனின் புதிய பிரதமராக. இளவரசர் ஷேக் சல்மான் பின் ஹமாத் அல் கலிபா (Sheikh Salman bin Hamad al-Khalifa) நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவிலும் பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள ஹமாத் துணைப் பிரதமராக பணியாற்றியுள்ளார்.

மேலும் பஹ்ரைனின் பாதுகாப்புப் படையின் துணை தளபதியாக இருந்தார். சர்வதேச நாடுகளுடன் இணக்கமாகவே செல்ல விரும்பும் ஹமாத்தினால் அந்நாட்டு வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## விலங்குகளும், தீபாவளியும்

சமுதாயத்தில் தீப ஒளி திருநாள் என்பது குதூகலத்தின் உச்சம் , திரு விழாவின் மகிழ்ச்சி, குழந்தைகள் காத்திருப்பின் நிலை இல்லா பேரின்பம். ஆனால் விலங்கினங்களும், பறக்கும் புல்லினங்களும் எப்படி பார்க்கிறது இந்த தீப ஒளி திருவிழாவை.

நாய், பூனை, மாடு போன்ற நம்முடனே வசிக்கும் விலங்கினங்கள் கூட தீப ஒளி திருநாளை ஒரு வித பய உணர்ச்சியோடே கடக்க முயற்சிக்கிறது. காரணம் அதீத ஒலி , வெடிப்பினால் வரும் புகை, அதிர்வுகளின் தாக்கம் என ஒரு வித அச்ச உணர்வு நம் வளர்ப்பு விலங்குகளுக்கே வரும் பொழுது வனவிலங்குகளின் நிலை என்னவாக இருக்கும். கொஞ்சமேனும் சிந்திப்போம்.

பட்டாசு வெடிப்பால் வேதிப்பொருள் சார்ந்த குப்பைகள் உருவாகிறது. அந்த குப்பைகளில் உணவை தேடும் விலங்கினங்களை என்றாவது சிந்தித்து இருக்கிறோமா?

குறிப்பாக யானை போன்ற கூட்டமாக இருக்கக்கூடிய விலங்குகளுக்கு வெடி சத்தம் , புகை மூட்டம், திடிர் வெளிச்சம், அதிர்வு போன்றவை யானை களை மிரள செய்து அங்கும் இங்கும் சிதறி ஓடவைப்பது, பயம், ஒரு வித மன குழப்பம் போன்றவற்றை உருவாக்குகிறது என்று யானை சார்ந்த ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அதீத சத்தத்தின் விளைவால் யானைகள் மிரண்டு ஊருக்குள் வருவது, பயத்தால் சாலையில் விபத்துக்குள்ளாவது போன்ற வாய்ப்புகளும் உள்ளது. அதேபோல பட்டாசு சத்தத்திற்கு அஞ்சி தன் வாழ்விடங்களை விட்டு நகரும் இக்கட்டான சூழல் ஏற்படலாம், அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் யானைகளுக்கான உணவு, தண்ணீர், வாழ்விடம் என்பது கேள்விக்குறியாகும் ?


தீர்வுதான் என்ன? அதிக வெடி சத்தத்தை தரும் பட்டாசுகளை தவிர்க்கலாம். ஒலி, ஒளி மாசு அதிகம் ஏற்படுத்தாத பட்டாசுகளை வாங்க முயற்சிக்கலாம்.

தீப ஒளி திருநாள் என்பது கொண்டாட்டத்தின் உச்சம் தான் என்ற போதிலும் இந்த உலகம் மனிதனுக்கு மட்டுமானது அல்ல என்பதையும் சற்றே உணர்ந்து செயல்படுவோம், சூரியனை காட்டிலும் உச்ச பட்ச ஒளி உலகில் இல்லை, சின்னஞ்சிறு பறவைகளின் ஒலியை கோடி பட்டாசுகள் இணைந்தாலும் கொடுக்காது என்ற புரிதலோடு தீப ஒளி திருநாளை கொண்டாடுவோம்.






தூக்கணாங்குருவிகளின் கூடு கட்டும் அழகே தனித்துவம். மேசன்மார் ஒரு வீட்டை கட்டுவதைப்போல அழகாக இருக்கும். இவை சத்தமற்ற, ஆரவாரமில்லாத இடங்களிலேயே கூடுகள் அமைக்கும்.



இராசாளிப்பறவை பருந்து இனத்தைச் சேர்ந்தது. இதன் தலை உச்சி படத்தில் காண்பதுபோல் நல்ல கருப்பு நிறமாகவும் தொண்டைப்பகுதி வெண்ணிறமாகவும் மார்புப்பகுதி செந்நிறமாகவும் முதுகுப்பகுதி கருப்பு நிறமாகவும் இருந்தது. இது உருவத்தில் செம்பகத்தின் அளவு பருமனானது. இது மிகுந்த உயரத்தில் தான் அமர்ந்து தனது இரையைத்தேடும் இயல்புடையது.

## சில பூச்சி இனங்களும், பறவைகளும்



இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 15.11.2020 அன்று வெளியிடப்பட்டது.